


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 27 ★ 26.05.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


## தமிழர்கள் மீதான இன அழிப்பு தொடர்கிறது!



✪பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகள் ✪தமிழ் பெயரில் கோயிலில் பணிபுரிந்த முஸ்லிம் நபர் கைது

அம்பலமாகிய பல அதிர்ச்சித் தகவல்கள்



## தமிழர் நலன்சார்ந்து செயற்பட முடியாத நிலையில் அரசின் அங்கமாக இருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

சுரேஷ் பிரேமச்சந்திரன் – சிறப்பு நேர்காணல்

## அமெரிக்காவின் பாதுகாப்பு வளையத்துக்குள் இலங்கை

பூமிகன்





## உயிர்த்த ஞாயிறுப் படுகொலைகள்

மத நிறுவனங்களை நோக்கிச் சில கேள்விகள்

நிலாந்தன்

## முள்ளிவாய்க்கால் பத்து ஆண்டுகளாகியும் எட்டப்படாத நீதி!

# தமிழர்கள் மீதான இன அழிப்பு தொடர்கிறது!

## ✪பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகள் ✪தமிழர் என்று ஏமாற்றிய இஸ்லாமிய நபர். ✪அம்பலமாகிய பல அதிர்ச்சித் தகவல்கள்

திருகோணமலை மூதூர் கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் தமிழர் என கூறி ஆலய குருக்களுக்கு உதவியாளராக இருந்த முஸ்லிம் நபர் ஒருவரை மூதூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு வழங்கப்படும் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகளை கலந்து கொடுத்தாரா? என்று பக்தர்கள் எழுப்பிய சந்தேகத்தையடுத்து அது தொடர்பில் ஆலய நிர்வாசபையினரை அழைத்து நேற்று மூதூர் காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது. இச்சம்பவம் தொடர்பில்



மேலும் தெரியவருவதாவது, ஏறாவூரைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது சொந்தப் பெயரை மறைத்து சிவா என்ற தமிழ் பெயரில் கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தின் பூசகருக்கு உதவியாளராக கடந்த 02 வருடங்களாக பணியாற்றி வந்துள்ளார். இவர் பூசையின் போது பக்தர்களுக்கு வழங்கும் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகளைக் கலந்து கொடுத்து வந்துள்ளதாக பக்தர்கள் சிலர் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். இந்நிலையில் குறித்த நபர் கடையொன்றில் கையடக்க தொலைபேசிக்கான அட்டைகளை திருடி சேருவில பகுதியில் விற்ற போதே கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரை மூதூர் காவல் துறையினர் விசாரணைக்குட்படுத்திய போது மேற்படி நபர் தமிழர் அல்லர்

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# எமது உறவுகளின் விடுதலையில் ஏன் இரட்டை வேடம் போடுகின்றீர்கள்? கூட்டமைப்பிடம் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கேள்வி

நீண்டகாலமாக சிறைகளில் வாடும் எமது உறவுகளின் விடுதலையில் ஏன் இரட்டை வேடம் போடுகின்றீர்கள் என தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இவ்விடயம் குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பொதுபலசேனாவின் ஞானசாரதேரர் சனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இதனை கூட்டமைப்பு



கண்டித்திருந்ததோடு, மாவை.சேனாதிராஜா, சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்ற கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் "ஞானசாரதேரருக்கு பொதுமன்னிப்பு அளிக்க முடியும் என்றால் தமிழ் அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது" என்று நாடாளுமன்றத்திலும், வெளியிலும் குரல் கொடுத்திருந்தார்கள். அதற்கு முதலில் எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆனால் 2015ஆம் ஆண்டு மைத்திரி-

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# பாதுகாப்புத்துறையை வலுப்படுத்துவதற்கு வாக்களிக்கும்போது சிந்திக்கவில்லையா? சிறீதரன் எம்.பியிடம் தமிழ் புத்திஜீவிகள் கேள்வி

பாதுகாப்புத்துறையை வலுப்படுத்தும் சிறீலங்காவின் ஒதுக்கீடுகளுக்கு வாக்களித்து விட்டு, வடக்கு இராணுவத்தினருக்கு, கைலாகுகொடுத்து விட்டு தற்போது கெடுபிடிகள் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கருத்து கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ் புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து தமிழ் புத்திஜீவிகள் மேலும் தெரிவித்ததாவது,

தனது வீடு இராணுவத்தினரால் சோதனைக்குட்பட்டதையடுத்து பாராளுமன்றக்குழு கூட்டத்தில் தன்னால் அவசரகாலச்சட்டத்திற்கு வாக்களிக்க முடியாது என்று கூறிவிட்டு பின்னர் தனது நெருங்கிய தரப்புக்களுடன் அவசரகாலச சட்டத்திற்கு வாக்களித்தால் மக்கள் மத்தியில் செல்வாக்கும் இழந்து போகும் அபாயம் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியே கடந்த 24ஆம் திகதி அவசரகால நீடிப்பு எதிராக வாக்களித்திருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

இதனைவிடவும் நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது பல்வேறு முழக்கங்களையும் செய்திருந்தார். உண்மையிலேயே 2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றதிலிருந்து வடக்கில் படைகள் குவிந்துள்ளன என்று கூறிவரும் இவர் அந்தப்படைகள் நிலைகொள்வதற்கும் வலுவாக்குவதற்குமான மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடுகளுக்கு வாக்களித்தே வந்திருந்தார்.

தன்மானத்தினை இழந்து வாக்களித்து வருவதாக ஊடகங்களுக்கு கூறினாலும், தன்மக்கள் சார்ந்து செயற்படத் திராணியற்ற தன்மை அதுவாக இருக்கின்றது, தற்போது கூட அவசரகால சட்டத்திற்கு எதிராக ஒட்டுமொத்த



கூட்டமைப்பினரும் வாக்களித்திருக்கவில்லை. தாயகத்தில் தமிழ் மக்கள் கெடுபிடிக்குள் உள்ளாகின்றார்கள் என்றால் கூட்டமைப்பாக முடிவொன்று எடுக்கப்பட்டல்லவா செயற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறபெற்றதாக இல்லை. அவசரகால சட்டத்தினையும் வைத்து தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைக்கவே முயற்சிகள் நடைபெறுகின்றன. மேலும் சிறிதரன் தனது வீட்டிற்குள் படைகள் புகுந்துவிட்டன என்பதால் ஏற்பட்ட தலையிடி காரணமாகவே தாயகத்தமிழர்கள் கெடுபிடிக்குள் இருப்பதை கருத்தில் கொண்டிருக்கின்றாரே தவிர மக்கள் மீதான அபிமானத்தால் அல்ல என்பது வெளிப்படை. இதனைவிடவும், தாயகத்தில் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்கள் உள்ளிட்ட நிகழ்வுகளில் படைகளுடன் கைலாகுகொடுத்துக்கொண்டும், புலனாய்வுத்தரப்புக்களுடன் திரைமறைவுத் தொடர்புகளையும் கொண்டிருக்கும் சிறிதரன் தமிழ் மக்கள் சார்ந்து தீர்மானங்களை எடுக்கின்றார் என்பது கானல்நீரே.

தமிழ்த்தேசிய சிந்தனையில் இருந்து செயற்படுவதாகவும் தாயக உறவுகளின் கஷ்ட நஷ்டங்கள் என அனைத்தையும் அரசியலாக்கும் முழுத்தகுதியையும் கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு தமிழர்களின் இருப்பினை கருவறுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவரான ரிஷாட் பதியூதீனுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத பிரேரணையை ஆதரிப்பதற்கு தயங்குவது ஏனோ? சிறிதரனின் நண்பரான நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஆதரிக்கின்றபோதும் அவர் அடக்கிவாசிப்பதன் அர்த்தம் தான் என்னவோ? மேலும் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்குக்கோ அல்லது மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலிக்கு எதிராக ஒருவார்த்தையேனும் வெளியிட திராணி இருக்கின்றதா என்ற கேள்விகள் இப்போது எழாமல் இல்லை.

## ஞானசாரர் விடுதலையின் பின்னணியிலுள்ள அரசியல் - கோத்தாவுக்கு எதிராக காய்நகர்த்தும் மைத்திரி



சிங்கள - பௌத்த இனவாத அமைப்பான பொதுபலசேனாவின் செயலாளர் நாயகம் வண. கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சனாதிபதியின் மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றமை, கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிரான மேலுமொரு காய்நகர்த்தல் என அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன. கோத்தபாய ராஜபக்சவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த ஞானசாரருடன் மைத்திரி ஏற்கனவே தொலைபேசி ஊடாகப் பல தடவைகள் உரையாடியுள்ளார். கடந்த சனிக்கிழமை வெசாக் தினத்தன்று வெலிக்கடை சிறைச் சாலைக்கு சென்ற சனாதிபதி ஞானசாரருடன் அவரது விடுதலை தொடர்பில் இறுதிக் கட்டப் பேச்சு நடத்தினார்.

கைதிகளின் விடுதலை தொடர்பான நிகழ்ச்சிக்காக சனாதிபதி சிறைச்சாலை ஒன்றுக்குச் செல்வது வழமையல்ல. இருந்தபோதிலும், ஞானசாரரை சந்திப்பதற்கு மைத்திரிக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே அந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினரான திலங்க சுமத்திபால, தேரர் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் இரு தடவைகள் சிறையில் தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் எனவும், இந்தக் கலந்துரையாடலின் பின்னரே தேரரை விடுவிக்கின்ற ஆவணங்களில் சனாதிபதி கைச்சாத்திட்டார் எனவும் மேலும் தெரியவருகின்றது.



வெசாக் தினத்தன்று வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றிருந்த சனாதிபதி, கோத்தாவின் மேலுமொரு நெருக்கமான சகாவான, மரண தண்டனை கைதியாகியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவையும் சந்தித்து விசேட பேச்சு ஒன்றை நடத்தியுள்ளார் எனவும், கோத்தா எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அவருக்கு எதிராக இந்த இருவரையும் சனாதிபதி தரப்பு பயன்படுத்தவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இதன்படி அடுத்த சனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடுகின்றமை உறுதியாகி வருகின்றது என அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான பிரச்சாரத்தை தீவிரமாக முன்னெடுத்த ஞானசாரர் விடுதலை செய்யப்பட்டிருப்பது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும், அடுத்த சனாதிபதித் தேர்தலையே இலக்காகக்கொண்டு செயற்படும் மைத்திரி இந்த விமர்சனங்களையிட்டு அலட்டிக்கொள்பவராக இல்லை.

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது???

முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் போர் நிறைவுக்கு வந்து பத்து ஆண்டுகள் நிறைவுறுகின்றது. விடுதலைக்கான பயணம் ஆரம்பித்தது முதல் அதனை முடக்குவதற்காக சிறீலங்கா அரசாங்கம் பல கோணங்களில் முயற்சிகளை எடுத்து வந்தே இருக்கின்றது.

அதன் ஒரு அங்கமாகத்தான், அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டத்தினை அமுலாக்கி தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் சந்கேத்தின் பேரில் கைது செய்யும் நடவடிக்கையாகும். இதனை அடியொற்றியே சிறீலங்கா படைகளாலும், காவல்துறையினராலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தற்போதைய சூழலில் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் இன்னமும் 106 உறவுகள் தமிழ் அரசியல் கைதிகள் என்ற பெயரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னரான சூழலில் இவர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப்போராட்டங்களை முன்னெடுத்தார்கள். அத்தருணங்களில் எல்லாம் சிறீலங்கா அரசு மிக நாசுக்காகவே காய்களை நகர்த்தியது.

தமிழர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வைத்து வாக்குறுதிகளை வழங்கி அப்போராட்டங்களை மட்டுப்படுத்தியது. அதேநேரம், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு நிபந்தனைகளை முன்வைத்து தீர்மானங்களை எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களையும் கூட்டமைப்பு கைநழுவ விட்டிருந்தது.

மேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை சட்டரீதியாக அணுகாது, அரசியல் ரீதியாகவே அணுகப்பட்டிருக்க வேண்டிய போதும் அவ்வாறான செயற்பாடொன்று முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அவர்களின் விடுதலை இன்று வரையில் சாத்தியமாகாதுள்ளது.

அதேநேரம், தமிழ் அரசியல் கைதிகளிடத்தில் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களின் பிரகாரம் அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள பல வழக்குகளை வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றியமைத்தும் நீண்டகாலங்களுக்கு தவணைகளை வழங்கும் நிலைமைகளும் அண்மைக்காலமாக திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயங்கள் எல்லாம், தமிழ் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டபோதும் இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக இல்லை. மறுபக்கத்தில், சிங்கள, பௌத்த அமைப்புக்கள், சிவில் அமைப்புக்களின் கோரிக்கைகளை அடுத்து இலங்கையின் நீதிதேவையையே அவமதித்த பொதுபலசேனா அமைப்பின் கலகொட அத்தேஞானசார தேரரை சனாதிபதி மைத்திரிபால பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார். வெசாக் பண்டிகையின்போது 762சிறைக்கைதிகளை விடுவித்தும் உள்ளார்.

ஆனால் இத்தகைய தருணங்களில் கூட தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் சனாதிபதியிடத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எந்தவிதமான கோரிக்கைகளையும் முன்வைக்காத நிலைமையே நீடிக்கின்றது. அதேநேரம், தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாத விடயங்களுடன் தொடர்புடையவர்கள் அவர்கள் மீது வழக்குகள் காணப்படுகின்றன. ஆகவே அவர்களை பொதுமன்னிப்பில் விடுவிக்க முடியாது என்றும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உண்மையிலேயே மனிதகுலத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து இனப்படுகொலையை அரங்கேற்றிய படைத்தரப்பு மீது ஏதாவது சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவர்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்கான பகடைக்காய்களாகவே தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சிங்கள பேரினவாதத்தின் இந்த சூட்சுமத்தினை தமிழ்த் தலைமைகள் உணர்ந்து கொள்ள வேண்டும். சிறீலங்கா அரசுக்கு கால அவகாசத்தினை பெற்றுக்கொடுத்து விட்டு அது பொறுப்புக்கூறலைச் செய்யும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பது வேடிக்கையானது.

அரசியலில் நாளை கிடைக்கும் கோழியை விடவும், இன்று கிடைக்கும் முட்டையே மேலானது என்ற யூதப்பழமொழியை நினைவில் நிறுத்தி கூட்டமைப்பு தன் இனம் சார்ந்து சிந்தித்து சந்தர்ப்பத்தினை பயன்படுத்த வேண்டும். இல்லையேல் அரசியலில் இருந்து தயவாக ஒதுங்கிக்கொள்ள வேண்டும். உறவுகளின் உணர்வுகளில் நின்று அரசியல் நடத்துவதற்கு முனையக் கூடாது என்பதை நேரடியாகவே கூறிவைக்கின்றோம்.

## தி.மு.க. தலைவர் மு.க. ஸ்ராலினை தாயகத்திற்கு வருமாறு முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு





நடந்து முடிந்துள்ள மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணியைஅபாரவெற்றிக்குவழி நடத்தியதாக மு.க.ஸ்ராலினிற்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன்.

இன்று அவர் திராவிட முன்னேற்ற கழக தலைவர் மு.க.ஸ்ராலினிற்கு அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் திராவிட முன்னேற்றகழகம் உங்களின் தலைமையில் எதிர்காலத்தில் மேன்மேலும் வெற்றிகளையும் சாதனைகளையும் படைத்து தமிழகத்துக்கும் உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் மகத்தான பணிகளை மேற்கொள்ளும் என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இலங்கையில் இறுதியுத்தம் நடைபெற்றகாலப்பகுதியில் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட போது திராவிட முன்னேற்ற கழகம் செயற்பட்டவிதம் தொடர்பில் எமது மக்கள் மத்தியில் இன்றும் ஏமாற்றமும் மற்றும் கசப்புணர்வும் இருந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் எமது மக்களின் அரசியல் ,பொருளாதார மற்றும் சமூக அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் காத்திரமான நடவடிக்கைகளை நீங்கள் எதிர்காலத்தில் முன்னெடுப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

இதற்கு என்னாலான சகல உதவிகளையும் ஒத்தாசைகளையும் நான் வழங்குவேன். அத்துடன் எமது மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காகவும் எவ்வாறு தமிழகத்துக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இடையேசமூக,பொருளாதாரமற்றும் கலாசாரரீதியான தொடர்புகளை வலுப்படுத்தலாம் என்று ஆராய்வதற்காகவும் நீங்கள் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தசந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கின்றேன். இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குநான் தயாராக இருக்கின்றேனெனவும் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்புவிடுத்துள்ளார்.

## சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண உதவுங்கள் மோடிக்கு சி.வி.விக்னேஸ்வரன் வாழ்த்து



நடந்து முடிவடைந்த இந்திய பாராளுமன்ற தேர்தலில் பெரும் வெற்றி பெற்றுள்ள பாரதிய ஜனதா கட்சிக்கும் மீண்டும் இந்திய பிரதமராக தெரிவுசெய்யபப்ட்டுள்ள நரேந்திர மோடிக்கும் வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பியுள்ள வட மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் விக்னேஸ்வரன், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் சமஷ்டி கட்டமைப்புக்குள் தீர்வு ஒன்றினை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை தலைமை ஏற்று முன்னெடுக்கவேண்டும் என்று நரேந்திர மோடியிடம் கேட்டுக்கொடுள்ளார். “இலங்கை தமிழ் மக்கள் உங்களிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். உங்களிடம் பல விடயங்களை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்” என்று குறிப்பிட்டுள்ள விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழிடங்களில் தொடர்ந்து அரசாங்க அடக்குமுறை, இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் சிங்கள குடியேற்றம் ஆகியவற்றின் பாதிப்புக்களினால் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபோது ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், நீதி, இறைமை மற்றும் சுய மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்று நரேந்திர மோடி வலியுறுத்தி இருந்தமையையும் கூட்டுறவு சமஷ்டி பற்றி குறிப்பிட்டிருந்தமையையும் விக்னேஸ்வரன் தனது வாழ்த்துச்செய்தியில் நினைவுபடுத்தியுள்ளார். இந்தியா தனது அயலவர்கள் சந்தோசமாகவும் திருப்தியாகவும் இருப்பதை உறுதிசெய்யும் நேரம் வந்திருப்பதாகவும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவுடனான அணுகுமுறைகளை சீர்தூக்கி பார்க்குமா தமிழர் தரப்பு

### தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

இந்திய நடாளுமன்றத் தேர்தல்கள் நிறைவுக்கு வந்திருக்கின்ற நிலையில் பா.ஜ.க. பெருவெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ளது. இந்நிலையில் தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவுடன் கொள்கைரீதியில் முறையான அணுகுமுறைகளை முன்னெடுப்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து தமிழர் தரப்புக்களும் மீண்டும் சீர்தூக்கிப் பார்க்குமா என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்களின் இனப்பிரச்சினை விவாகரமும், தமிழர்களின் பிரதிநிதிகள் இந்திய தரப்பினருடன் கொண்டிருந்த அணுகுமுறைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததாகவே இருந்துள்ளமையே வரலாறாக இருக்கின்றது. பிராந்தியத்தில் “பெரியண்ணன்” பாத்திரத்தினை வகித்துக்கொண்டிருக்கும் இந்தியாவைத் தாண்டி ஏனைய மேற்குலக தரப்புக்கள் இலங்கை விவகாரங்களில் தலையிடுவதாக இருந்தாலும் சரி, தமிழர் விவகாரத்தில் தீர்மானங்களை எடுப்பதாக இருந்தாலும் சரி இயலாதவொரு கருமமாகவே இருந்து வருகின்றது.

அவ்வாறு இருக்கின்றபோது, தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வினை பெறுவது என்பது நேர்கோட்டு அணுகுமுறையைக் கொண்டதல்ல. பல்வேறுபட்ட தரப்புக்களுடன் பல்வேறு வகையான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய நகர்வுகளே ஒரு இனவிடுதலைக்கான இலக்கினை அடைவதற்கான பயணத்தில் முக்கிய விடயமாகின்றது. இதற்கு உலகளாவிய அனுபவங்களும் சான்றாதாரங்களாக உள்ளன.

அப்படியிருக்க, அயல்நாடான இந்திய அரசுடன், தமிழக தரப்புக்கள் தமிழர்கள் சார்பான விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ‘தொடர்ச்சியான அணுகமுறை’ பின்பற்றப்பட வேண்டும் என்பது கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகையதொரு கொள்கை செயற்றிட்டம் இதுவரையில் தமிழர் தரப்பில் இல்லாதிருப்பதானது பெரும் வெற்றிடமே.

தமிழ் மக்கள் ஆணைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, போரின் பின்னரான கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய தலைமைகளுடன் சந்திப்புக்களை நடத்தியதை விரல்விட்டு எண்ணுமளவிற்கே நிலைமைகள் உள்ளன. சர்வதேசம் தீர்வளிக்கும், ஐ.நா நீதிவழங்கும் என்ற நம்பிக்கைகள் ஒருபுறமிருந்தாலும் பிராந்திய அரசியலில் ஆதிக்கமும், அழுத்தமும் அளிக்கவல்ல அயல்நாடான இந்தியாவினை புறமொதுக்கிய நகர்வுகள் எத்தகைய பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பது வெளிப்படை.

தமிழர்களின் ஆணைபெற்ற கூட்டமைப்பு சிங்கள ஆட்சியாளர்களின் நகர்வுகளை ஆழமாக அவதானித்து, சரணாகதி அரசியலைத் தவிர்த்திருந்தால் தாயக தமிழர்களின் நிலைமைகள் இத்தனை தூரம் மோசமடைந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. மறுபக்கத்தில் தமிழ் மக்களின் சார்பாக செயற்படும் தாயக அரசியல் தரப்புக்களும் பூகோள அரசியல் பற்றிய புரிதல்களின்றி இந்திய எதிர்ப்புக்கோசங்களை முன்னெடுத்து வருகின்றமையும் தமிழர்களின் விடுதலைப்பயணத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு ஒரு காரணமாகவே இருந்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், இந்திய அரசின் மீது முழுமையான நம்பிக்கையை கொண்டிருக்காது விட்டாலும், இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தார்மீக கடமைகளை சுட்டிக்காட்டி அழுத்தங்களை அளிப்பதற்கு ஒருபோதும் பின்னின்றதில்லை.

2008ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையினை முழுமையாக அவதானிக்கும் ஒவ்வொரு, தமிழ் பொதுமகனும் தலைமையின் பூகோள அரசியல் ஆளுமையை சரியாக புரிந்துகொள்ள முடியும். ஆகவே இந்தியா தன்நலன் சார்ந்து நகர்ந்தாலும், தமிழர்கள் அந்த நலன்களை தம்நலன் சார்ந்து திருப்புவதற்குரிய சாமர்த்தியத்தினை கொண்டிருக்க வேண்டும்.

எத்தனையோ வாய்ப்புக்கள் கை நழுவிப்போய்விட்டன. அவற்றைப்பற்றி மீட்டிபார்ப்பதே எமது விடுதலை வேட்கைப் பயணத்தின் வேகத்தினை குறைப்பதாகவே இருக்கும். தற்போது ஒருகட்சியின் ஆதிக்கம் செறிந்த ஆட்சி உருவாகியுள்ளது. ஆகவே அதனையாவது தமிழர்கள் தமது விடயங்களை முன்னகர்த்திச் செல்வதற்கு சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்து ஐந்துவருடங்கள் இருக்கின்றன. ஆனால் ஆரம்பித்திலிருந்தான அணுகுமுறைகளே கொள்கையளவிலான மாற்றங்களை ஏற்படுத்தவல்லனவாக இருக்கும். அதற்குரிய செயற்றிட்டமொன்றை தமிழ் அரசியல் பிரதிநிதித்துவங்கள் வகுப்பதே தற்போது அவர்கள் முன்னுள்ள கடமையாகின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றோம் என்றுள்ளது.

# தமிழர் நலன்சார்ந்து செயற்பட முடியாத நிலையில் அரசின் அங்கமாக இருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு - சுரேஷ் பிரேமச்சந்திரன்

உயிர்த்த ஞாயிறு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரசு கவுழும் நிலை ஏற்படும். அவ்வாறான நிலை ஏற்படுகின்றபோது தமிழ் மக்கள் நலன்களை மறந்து அரசை தாங்கிப்பிடிக்க கூடியவர்களாக கூட்டமைப்பு இருக்கின்றது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். அச்செவ்வியின் முழுவடிவம் வருமாறு.

**கேள்வி:- அவசரகால நிலைமைகள் அமுலாக்கப்பட்டதன் பின்னர் தமிழர் தாயகத்தின் நிலைமை என்ன?**

பதில்:- ஏற்கனவே தமிழர் தாயகம் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும்கூட இராணுவம் முகாம்களுக்குள் முடங்கியிருந்தது. ஆனால் இப்பொழுது வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் பல பகுதிகளில் இராணுவ சோதனைச்சாவடிகளும் இராணுவ சுற்றி வளைப்புகளும் கைதுகளும் ஆரம்பித்துள்ளன. குறிப்பாக வடக்கு மாகாணம் என்பது யுத்தத்திற்குப் பின்னர் மிகவும் அமைதியான பிரதேசமாக இருந்து வந்தது. அத்தகைய வடக்கு மாகாணம் இன்று ஏதோ ஒரு யுத்தப் பிரதேசம் போன்று காட்சி அளிப்பதுடன் மக்களும் அச்சநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதனைப்போன்றே சில வியாபாரிகளும் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். வயதான பிரயாணிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட தொடர்ச்சியாக பிரயாணம் செய்வோர் பல்வேறு சோதனைச் சாவடிகளில் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை முன்வைத்திருக்கும் சமயத்தில் இராணுவம் இதனை தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வருகிறது. ஆகவே இந்த அவசரகால நிலை என்பது தமிழ் மக்களை மட்டுமன்றி ஒட்டுமொத்த சனநாயகத்தையும் கேள்விக்குட்படுத்தும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வான் ஒன்றில் பயணித்த பயணிகளுக்கும் காவல் துறையினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் ஆத்திரமடைந்த காவல் துறையினர் வானில் தாங்களே சில பொருட்களை வைத்துவிட்டு வானில் வந்தவர்களைக் கைது செய்ததாகவும் பின்னர் காவல் துறையினரின் திட்டமிட்ட செயல் அம்பலமானதும் வேறு வழியின்றி அவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் சமூக வலைதளங்களில் செய்தி பரவியது. இதன் மூலம் அவசரகாலச் சட்டத்தின்கீழ் அமைதியாக இருக்கும் தமிழர்கள் திட்டமிட்டு சீண்டப்படுவது நிரூபணமாகிறது.

**கேள்வி:- ஐ.எஸ் தாக்குதலின் பின்னர் இலங்கையில் இனமுறுகலை ஏற்படுத்தும் வகையிலான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமையின் பின்னணி என்னவாக உள்ளது?**



பதில்:- உயிர்த்த ஞாயிறு தினமான ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற தொடர் தற்கொலைக் குண்டு தாக்குதல் என்பது மிகப் பயங்கரமானது என்பதும் அது திட்டமிட்ட பயங்கரவாதச் செயல் என்பதிலும் எமக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் இந்த சம்பவம் நடைபெறுவதற்குப் பல வருடங்களுக்கு முன்பாகவே இலங்கையில் இருக்கும் சில முஸ்லிம் நபர்கள் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் பயிற்சி பெறுவதாகவும் இலங்கையில் முஸ்லிம் அடிப்படை வாதத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதற்காக முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரச்சாரங்கள் மூலம் மூளைச்சலவை செய்யப்படுவதாகவும் பல்வேறுபட்ட கருத்துக்கள் ஊடக வெளியில் பேசப்பட்டு வந்திருக்கின்றது.

அது மாத்திரமல்லாமல், முக்கியமாக முஸ்லிம் மதத் தலைவர்கள் இதுதொடர்பாக முன்னைய பாதுகாப்புச் செயலாளர் உட்பட பாதுகாப்புப் பிரதானிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் சொல்கின்றனர். ஆனால் உரிய தரப்பினரால் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குப் பின்னர், புத்தளம் வனாத்தவில்லு பிரதேசத்தில் ஆயுதங்களுடன் முஸ்லிம் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். அதுதொடர்பான தொடர் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவில்லை. பின்னர் வவுணதீவில் சோதனைச் சாவடியில் காவலில் இருந்த இரண்டு காவல் துறையினர் கழுத்துவெட்டி கொலை செய்யப்பட்டனர். அப்பொழுதும் ஒழுங்கான விசாரணை மேற்கொள்ளப்படாமல் அதனை திசை திருப்பும் நோக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட அப்பாவியொருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டார்.

இரண்டு காவல் துறையினர் கொல்லப்பட்டபோதுகூட உண்மையைக் கண்டறிவதில் பாதுகாப்புப் பிரிவினர் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. இதற்குப் பின்னர், காத்தான்குடியில் ஒரு மோட்டார் சைக்கிளில் குண்டுவைத்து வெடிக்க வைக்கப்பட்டது. அதனையும்கூட காவல் துறையினரோ அல்லது புலனாய்வுப் பிரிவினரோ கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது அரச தரப்பிலிருந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இருக்கின்ற 26 முஸ்லிம்கள் ஐஎஸ் ஐஎஸ்சில் இணைந்து அவர்களுக்கான பணிகளை மேற்கொண்டதாகவும் அவர்களுக்கான ஊதியம் இலங்கை இராணுவத்தினரிமிருந்து இன்றுவரை சென்றுகொண்டிருப்பதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறுகின்றார். இறுதியாக இத்தகைய ஒரு தாக்குதல் நடைபெறப்போகிறது என்பதை இந்தியப் புலனாய்வுத்துறை இலங்கைக்கு அறிவித்திருந்தது. அந்த அறிவித்தலும் கண்டுகொள்ளப்படவில்லை. அதற்குப் பின்னரே கடந்த 21ஆம் திகதிய உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. ஆகவே, தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே தகவல்கள் கிடைத்திருந்தும் அரசும் புலனாய்வுப் பிரிவினரும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? இதன் உள்நோக்கம் என்ன?

மிக நீண்டகாலமாக ஐஎஸ் ஐஎஸ் அமைப்பு தொடர்பாக பல தகவல்கள் கிடைத்தும் அவை எதுவும் கையாளப்படாமல் அத்தீவிரவாத அமைப்பு தன்னை பாரிய அளவில் வளர்த்துக்கொள்ள இலங்கை பாதுகாப்புத்துறையினர் ஊக்கமளித்துள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. நிச்சயமாக ஒரு அரசியல் தேவை கருதி ஓர் அரசியல் பின்னணி ஊடாகவே இது நடைபெற்றிருக்க முடியும். முன்னைய அரசாங்கத்திற்கும் இன்றைய அரசாங்கத்திற்கும் இதில் பங்கிருப்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிகின்றது. இவை ஒருபுறமிருக்க, உயிர்த்த ஞாயிறன்று குண்டுத்தாக்குதல்கள் நடைபெற்றது.




நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். ஆனாலும்கூட மதத் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மறுதாக்குதல்களோ கலவரங்களோ நடைபெறவில்லை. ஆனால் மூன்றுவாரம் கழித்து முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீதும் வர்த்தக நிலையங்கள்

தொடர்ச்சி →

தொடர்ச்சி → **தமிழர் நலன்சார்ந்து**

மீதும் வீடுகள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை பிற இடங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட குண்டர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இவை ஒரு திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. நிச்சயமாக ஒரு அரசியல் தேவை கருதியே இத்தகைய தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான இன முறுகல் இன முரண்பாடுகளை அதிகரிப்பதினூடாக சிங்கள பௌத்த வாக்கு வங்கியை முழுமையாக எடுத்துக்கொள்ள முடியும் என்று நம்புபவர்களே இவ்வாறான தாக்குதல்களுக்குப் பின்னால் இருப்பதாகவும் ஊடகவியலாளர்களினூடாக அறியக்கூடியதாக உள்ளது.

**கேள்வி:- உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அமைச்சர் ரிசாட், ஆளுநர்களான அசாத்சாலி, ஹிஸ்புல்லா போன்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் மேலெழுந்துள்ள நிலையில் அதுபற்றி கட்சித்தலைவர் என்ற அடிப்படையில் உங்களின் கருத்து என்ன?**

பதில்:- ஹிஸ்புல்லா அசாத்சாலி போன்றவர்களை ஆளுநர்களாக சனாதிபதி முஸ்லிம் வாக்குவங்கியைக் கைப்பற்றுவதற்காகவே நியமித்துள்ளார். அதேபோன்று ரிசாட் பதியுதீனை அமைச்சராக்குவதன் மூலம் ஐ.தே.க. தனது முஸ்லிம் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தனது தற்போதைய அரசாங்கத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கும் இவர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இவர்கள் தொடர்பாக இப்பொழுது பாரிய குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியிலிருந்து எழுந்துள்ளது. இவர்கள் அரசியலுக்கு வரும்பொழுது, சாதாரணமானவர்களாகவே வந்தார்கள். இவர்கள் இலட்சாதிபதிகளாகவோ கோடீஸ்வரர்களாகவோ இருக்கவில்லை. ஆனால் இன்று தொழிற்சாலைகள், தனியார் பல்கலைக்கழகங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் என பல்லாயிரம் கோடிகளுக்கு அதிபதிகளாக இவர்கள் மாறியுள்ளனர். இவ்வளவு பெரும்தொகை நிதி இவர்களுக்கு எவ்வாறு கிடைத்தது? ஒன்றில் இவர்கள் அமைச்சர்களாக இருந்தபொழுது பாரிய அளவு ஊழல் செய்திருக்க வேண்டும் அன்றேல் இவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து கோடிக்கணக்கான நிதி கிடைத்திருக்க வேண்டும்.

இவர்கள் தமது அரசியல் பலத்தை எவ்வாறு துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்பதை ஹிஸ்புல்லா பல இடங்களில் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். அதனை சமூக வலைதளங்களில் காணக்கூடியதாக உள்ளது. இவர்களது அரசியல் அதிகாரத்தினூடாக தமிழ் மக்களுக்கு அல்லது சைவ கோயில்களுக்கு உரித்தான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டன. தமிழ் மக்கள் இவர்களால் அனைத்துத் துறையிலும் புறக்கணிக்கப்பட்டனர். இவற்றிற்கு மேலாக பல குற்றச்சாட்டுகளும் மக்களால் சுமத்தப்பட்டுள்ளன. இன்னும் ஒரு படிமேல் சென்று வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடுமென்றும் அமைச்சுப் பதவியைத் துறந்தேனும் வடக்கு-கிழக்கு இணைப்பைத் தடுத்து நிறுத்துவேன் என்று ஆளுநர் ஹிஸ்புல்லாவும் ரிசாட்டும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆளுநர்களுக்கும், அமைச்சருக்கும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட அடிப்படைவாதிகளுக்குமிடையில் தொடர்புகள் இருப்பதாகவும் அவர்களைப் பாதுகாப்பதில் இவர்கள் ஈடுபட்டு வந்ததாகவும் பல தரப்பிலிருந்தும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு சூழலில் இவர்களை இவர்களது பதவிகளிலிருந்து இடைநிறுத்தி இவை தொடர்பான ஒரு முழுமையான விசாரணையை நடத்தி மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். ஆனால் அந்த நிலைப்பாட்டை சனாதிபதியோ பிரதமரோ எடுப்பதாகத் தெரியவில்லை. எதிர்கால அரசியலே அவர்களது இலக்காக உள்ளது. குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. நட்சத்திர விடுதிகள் இழுத்து மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை மீண்டெழுவதற்கு இன்னும் பல ஆண்டு ஆகலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது. இந்த குண்டுத்தாக்குதல்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் பலர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில்கூட சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் வகையில் விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை என்பதும் குறுகிய அரசியல் இலாபமே இவர்களது முதன்மையான விடயமாக இருப்பதையும் நாம் வெளிப்படையாகக் காணக்கூடியதாக உள்ளது.

**கேள்வி:- ஆளும் தரப்பு பிரதிநிதிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஆட்சி கவிழ்ந்து விடும் என்ற அச்சம் காணப்படுகின்ற நிலையில் தமிழர் தரப்பு இதனை எவ்வாறு கையாள வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்:- தமிழர் தரப்பாக இன்று பாராளுமன்றத்தில் செயற்படக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவாகவும் அரசுக்கு ஆதரவளிக்கும் ஒரு குழுவாகவுமே செயற்பட்டு வருகின்றது. இது தமிழரசுக் கட்சியாக இருந்தாலும் சரி ரெலோவாக இருந்தாலும் சரி புளொட்டாக இருந்தாலும் சரி இறுதியாக இவர்களது கூட்டு முடிவென்பது அரசைப் பாதுகாக்கும் ஒரு விடயமாகவே இருக்கின்றது. ஆகவே இப்பொழுதுகூட ரிசாட்பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாறுபட்ட கருத்தினையே தெரிவித்து வருகின்றனர். தமிழ் மக்களின் நலன்களிலிருந்து இன்றும்கூட அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு வக்கற்றவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருப்பதென்பதும் ஒரு வருந்தத்தக்க செயலாக இருக்கின்றது. ஆளும் தரப்புப் பிரதிநிதியின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஆட்சி கவிழும்நிலை ஏற்பட்டால் அதனைத் தாங்கிப் பிடிக்கக்கூடியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களின் குறைந்த பட்ச கோரிக்கைகள் பலவற்றை இவர்களால் நிறைவேற்ற முடியும். ஆனால் இவை தொடர்பாக அரசுடன் பேசி அவ்வாறான விடயங்களை கையாள்வதற்குப் பதிலாக கண்மூடித்தனமாக அரசாங்கத்தைப் பாதுகாப்பது ஒன்றே இவர்களது ஒரே கடமையாக இவர்களது செயற்பாடுகள் அமைந்திருப்பது அருவருக்கத்தக்கதாக இருக்கின்றது.

**கேள்வி:- இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகளை எப்படிப்பார்க்கின்றீர்கள்? அடுத்த கட்டம் இந்தியத்தரப்பினை**



**தமிழ்த் தலைமைகள் எவ்வாறு அணுக வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்:- இந்தியாவில் பா.ஜ.கவும் தமிழகத்தில் தி.மு.கவும் பெருவெற்றி பெற்றுள்ளன. இந்திய மக்களின் ஆணை பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியிலும் எதிர்பார்ப்புக்களுடன் வழங்கப்பட்டிருகின்றது. அவ்வாறிருக்க, எம்மைப்பொறுத்த வரையில், தமிழர் பிரச்சினையினை தீர்ப்பதற்கு பல்வேறு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அதில்மிக முக்கியமானதொரு விடயமாகவே அயல் நாடான இந்தியாவுடனான அணுகுமுறையை கொள்ளவேண்டியுள்ளது.

இலங்கையில் மஹிந்த, மைத்திரி, ரணில் இப்படி யார் ஆட்சிப்பீடத்திலிருந்தாலும் சீன சார்பான நிலைப்பாடொன்றே மையங்கொண்டுள்ளது. முதலீடுகளைச் செய்வதற்கு அனுமதிக்கின்றமை முதல், இறுதியாக செய்யப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் வரையில் கணிசமான இடைவெளிகளில் அந்நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. இதன்மூலம் ஆட்சியாளர்களின் போக்கினை தெளிவாக புரிந்துகொள்ள முடிகின்றது.

அப்படியிருக்கையில், அபிலாசைகளைப் பெறுவதற்கான உரிமைப்போராட்ட பயணத்தில் தமிழர்கள் தனியே சிங்கள ஆட்சியாளர்கள் மீதும், சர்வதேசத்தினையும் மட்டும் நம்பிக்கொண்டிருப்பது பொருத்தமற்ற செயற்பாடாகவே கொள்ளவேண்டியுள்ளது. அவர்களுடனான அணுகுமுறைகள் முன்னெடுக்கப்படுகின்ற அதேசமயத்தில் பிராந்தியரீதியிலும், அயல் நாடு என்ற வகையிலும் இந்தியாவுடன் இறுக்கமான தொடர்புகளைப் பேண வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக தமிழ் தலைவர்கள் மத்தியில் இந்திய மத்திய அரசுடன் மட்டுமல்ல, தமிழக தரப்புக்களுடனேயே தொடர்ச்சியான பிணைப்பொன்று இருப்பதை அவதானிக்க முடியவில்லை. இது மிகப்பெரும் வெற்றிடத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய நிலையில் தற்போது இந்திய மத்திய அரசு அறுதிப்பெரும்பான்மை பெற்று ஸ்திரமான ஆட்சியொன்றை கொண்டுள்ளது. ஆகவே கடந்தகாலத்தினை விடவும் தமிழர்களின் விடயத்தினை மிகவும் அவதானத்துடன் ஆழமாக அவர்கள் ஊடாக முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தொடர்ச்சியான அணுகுமுறைகள் ஊடாக கொள்கைரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி எமது நியாயமான தீர்வினைப் பெறுவதற்குரிய நகர்வுகளைச் செய்ய வேண்டும். பூகோள அரசியல் போக்கினை சரியாக புரிந்துகொண்டு இந்த நகர்வுகளைச் செய்தாக வேண்டியுள்ளது. ஆகவே தற்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதனையாவது சரியாக பயன்படுத்திக்கொள்வதோடு தமிழக உறவுகளையும் புதுப்பித்துக்கொள்வது அவசியமாகின்றது.

# அமெரிக்காவின் பாதுகாப்பு வளையத்துக்குள் இலங்கை

**பூமிகன்**



ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் தமக்கிடையேயான ஒரு போட்டிக்களமாக வல்லரசு நாடுகள் இலங்கையைப் பயன்படுத்த முற்பட்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கம் மைத்திரி - ரணில் எனப் பிளவுபட்டிருப்பதும் வல்லரசு நாடுகளுக்கு உதவுகின்றது. இது இலங்கையின் இராசதந்திரத்துக்கு புதியதொரு நெருக்கடியைக் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஈஸ்டர் குண்டு வெடித்த பின்னர் அவசரமாக இலங்கைக்குத் தேவையான புலனாய்வு உதவிகளை வழங்குவதில் அவசரமாக முன்வந்த நாடு அமெரிக்காதான். ஐ.எஸ். அமைப்புடன் அமெரிக்கா ஏற்கனவே போரை நடத்தியிருப்பதால், அது குறித்த அனுபவமும், அறிவும் அவர்களுக்கு உள்ளது. இலங்கையும் உடனடியாகவே அமெரிக்காவை அணுகியது. அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்களில் ஒன்றான எப்.பி.ஐ. அவசரமாக தமது நிபுணர்களை இலங்கைக்கு அனுப்பிவைத்தது.

ஐ.எஸ். அமைப்பை அடக்குவதற்கு உதவுவதுதான் அமெரிக்காவின் இந்த உடனடியான செயற்பாட்டுக்குக் காரணம் என வெளிப்படையாகச் சொல்லப்பட்டது. ஆனால், இதில் மறைமுகமான காரணம் ஒன்றும் இருந்தது. இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கு அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலான ஒன்று. அதற்கான ஒரு பதில் செயற்பாடாகத்தான் இலங்கைக்கு உடனடியாக உதவிகளுடன் அமெரிக்கா விரைந்தது.

இது வெறுமனே ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டதாக மறைந்துபோகக் கூடாது என்றால், இலங்கையுடன் ஏதோ ஒரு வகையான பாதுகாப்பு உடன்படிக்கைக்குச் செல்ல வேண்டும். அதன் மூலமாகவே இலங்கையில் தொடர்ந்தும் தமது இருப்பைத் தக்கவைக்கலாம். அதுவும் ஐ.எஸ். மூலமான அச்சுறுத்தலைப் பயன்படுத்தித்தான் இதனைச் செய்யலாம் என்ற வகையில் அமெரிக்கா சிந்தித்திருப்பதாகத் தெரிகின்றது.

அதன் பிரதிபலிப்புத்தான் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வாரம் வாஷிங்டன் அழைக்கப்பட்டதும், அங்கு செய்யப்பட்ட உடன்படிக்கைகளும். உயர் மட்டக்குழு ஒன்றுடன் அங்கு சென்ற மாரப்பன, முக்கியமான பேச்சுக்களை நடத்தினார். அவர் முதலில் நடத்தியது அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் போர்மியோவுடன். அது ஒரு வழமையான சந்திப்புத்தான். அவர்தான் அமெரிக்காவின் வெளிவிவகாரத்தை கையாள்பவர். அதனால் அந்தச் சந்திப்பில் அதிமுக்கியமாக எதுவும் இருக்கப்போவதில்லை.

அதன் பின்னர் அவர் நடத்திய சந்திப்புத்தான் முக்கியமானது. அடுத்ததாக திலக் மாரப்பனை சந்தித்த நபர் அமெரிக்க சனாதிபதி டொனால்ட ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்ட்டன். அவர் இலங்கை போன்ற ஒரு நாட்டுடன் அரசியல் விவகாரம் குறித்துப் பேசும் ஒரு நபரல்ல. இவர் பேசினால், அதன் பின்னணியில் ஏதோ இராணுவ விவகாரம் இருக்க வேண்டும். அதுவும் பெரியளவில் இருக்க வேண்டும். அமெரிக்காவின் சர்வதேச வேலைத் திட்டத்தில் இலங்கையும் இணைக்கப்பட்டுவிட்டது என்பது இதன் பொருளாக இருக்கலாம். இலங்கை விவகாரத்தில் அமெரிக்க சம்பந்தப்பட்டிருப்பது இப்போது இரகசியமான ஒன்றல்ல. முன்னர் குறிப்பிட்டது போல, எப்.பி.ஐ. இங்கு வந்திருப்பது பகிரங்கமானது. சி.ஐ.ஏ. எனப்படும் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுச் சேவையைச் சேர்ந்தவர்கள் வந்துள்ளார்களா என்பது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும்.



அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் இப்போது ஏற்பட்டுள்ள உடன்படிக்கை மூலம் ஆலோசகர்கள் வர இலங்கை வர இடமளிக்கப்பட்டுள்ளது. இராணுவம் வந்தால் நிச்சயமாக சர்ச்சை ஏற்படும். இராணுவ ஆலோசகர்கள் பெருமளவுக்கு வரலாம். அது சர்ச்சையை ஏற்படுத்தாது.

சீனப் புலனாய்வாளர்கள் அதிகளவில் இலங்கையிலிருப்பதாக அமெரிக்கா சந்தேகிக்கின்றது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் பெயரில் இலங்கை அரசுக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ அவர்கள் நுழைந்திருக்கலாம் என்பது அமெரிக்காவின் கணிப்பு. சீனப் புலனாய்வாளர்கள் இங்கிருப்பதற்கான சாத்தியத்தை இலங்கையின் பாதுகாப்புத் துறையினரும் மறுக்கவில்லை. ஆனால், தேசிய பாதுகாப்புக்கு அவர்கள் அச்சுறுத்தலாக இருக்காத வரையில் பிரச்சினையில்லை என்பதுதான் இலங்கையின் நிலைப்பாடு.

ஆனால், இலங்கையிலிருக்கக்கூடிய சீனப் புலனாய்வாளர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தாமும் ஏதாவது செய்ய வேண்டும் என அமெரிக்கா சிந்தித்தது. அதன் விளைவுதான் வாஷிங்டனில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள *military-to-military cooperation* தொடர்பான உடன்படிக்கை. இதிலுள்ள மற்றொரு அம்சம் என்னவென்றால், அமெரிக்கக் கப்பல்களும் இராணுவ அதிகாரிகளும் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்பதாகும்.

ஐ.எஸ். மீதான சர்வதேசப் போர்ப் பிரகடனம் என்ற பெயரில் ஏதோ ஒருவகையில் இலங்கையைத் தன்னுடைய பாதுகாப்பு வலயத்துக்குள் அமெரிக்கா கொண்டுவந்துவிட்டது. இதனால்தான், எதிர்க்கட்சிகள் இப்போது கிளர்ந்தெழுந்திருக்கின்றன. அமெரிக்க தூதுவர் மகாநாயக்கர்கள் உட்பட அரசியல் தலைவர்களைச் சந்தித்து இலங்கையில் நிரந்தரமான முகாமை அமைப்பதற்கான உடன்படிக்கை எதுவும் இல்லை. இலங்கை அரசாங்கம் அழைத்தால் இலங்கை வரும் அமெரிக்கப் படையினர் தற்காலிகமாக தங்கியிருப்பதற்கும், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குமே உடன்படிக்கை இடமளிக்கும்" என விளக்கமளித்துள்ளார்.

அதாவது, தற்காலிக முகாம்களை அமைப்பதற்கும், அமெரிக்க இராணுவ அதிகாரிகள் இலங்கை வந்து "தற்காலிகமாக" தங்கியிருப்பதற்கும் இந்த உடன்படிக்கை இடமளிக்கின்றது. "தற்காலிகமாக" என்பது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதற்கு இரு தரப்பினரிடமும் விளக்கம் இல்லை. அது வருடக்கணக்கிலும் நீடிக்கலாம்.

சனாதிபதி மைத்திரி சீனா சென்று செய்துகொண்டுவந்துள்ள பாதுகாப்பு உடன்படிக்கைகளுக்குப் பதிலடியாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான *military-to-military cooperation* குறித்த உடன்படிக்கை உள்ளது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அதனுடைய நீண்டகாலக் கவலையாக இருந்தது இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்குதான். ஈஸ்ட்டர் குண்டுவெடிப்புக்கள் அதற்கு எதிராக வலுவாக காய்களை நகர்த்துவதற்கு அமெரிக்காவுக்கு சிறப்பான ஒரு வாய்ப்பைக் கொடுத்திருப்பதாகவே கருதப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையிலும் இது அவர்களுக்குக் கிடைத்துள்ள ஒரு அதிஸ்டம் தான். தாராளமாக உதவிகளை வல்லரசுகள் போட்டிபோட்டுக்கொண்டு செய்கின்றன. முஸ்லிம்களை அடக்குவதாகக் காட்டிக்கொண்டு, தமிழ் மக்களுடைய சனநாயகப் போராட்டங்களையும் அடக்கமுடியும். அவசரகாலச் சட்டம் இதற்கு உதவும். "பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச யுத்தம்" ஒன்றில் இலங்கையையும் இணைத்துக்கொண்டுள்ள நிலையில், ஜெனீவாவிலோ சர்வதேச அரங்கிலோ இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்க அமெரிக்கா முனையுமா என்பதும் முக்கியமான கேள்வி. ஆக, ஈஸ்டர் தாக்குதலால் அதிகளவு பலனடைந்திருப்பது இலங்கைதான்!



# முள்ளிவாய்க்கால் பத்து ஆண்டுகளாகியும் எட்டப்படாத நீதி!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பெற்றோர்கள், உறவுகளை இழந்த சிறுவர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வரிசையில் நின்றார்கள். அத்தனை முகங்களும் சோகம் அப்பிய முகங்கள். விழிகளில் அப்படியொரு தவிப்பு. அவர்கள் முள்ளிவாய்க்காலில் பிறந்தவர்களும், ஒன்றிரண்டு வயதுகளுடன் முள்ளிவாய்க்காலை கடந்தவர்களும்தான். பல்வேறு மறைமுக அச்சுறுத்தல்களின் மத்தியிலும் கண்ணீர் விடவும் தீபமேற்றவும் அதன் வழியே நீதிக்கானதொரு போராட்டத்தை முன்னெடுக்கவும் முள்ளிவாய்க்கால் மண்ணில் திரண்டிருந்தனர் ஈழ மக்கள்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஈழத்தமிழர்களால் என்றுமே மறக்க முடியாத வடு. நமது மக்கள் கொத்துக்கொத்தாக கொன்று அளிக்கப்பட்ட கொடூரம் நிகழ்ந்த நிலம். கஞ்சிக்காக பசியில் கிண்ணங்களை ஏந்தி வரிசையில் நின்ற குழந்தைகள் கொன்றொழிக்கப்பட அவர்களின் குருதிகள் கஞ்சிப் பானைகளில் தெறித்த நாட்கள். இனத்தின் விடுதலைக்காகவும் நிலத்தின் உரிமைக்காகவும் போராடிய ஒரு இனம், தொகுதி தொகுதியாய் கொன்று அழிக்கப்பட்ட காலம் அது. அம் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்ந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்த இனப்படுகொலையில் இருந்து ஈழத் தமிழ் நிலம் தன்னுடைய காயங்களை எந்தளவுக்கு ஆற்றியிருக்கிறது? ஈழத் தமிழ் இனத்தின் காயங்களை ஆற்றுகின்ற, செயல்கள் ஏதேனும் நடந்திருக்கிறதா? உண்மையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஆறாத ஒரு காயம். அதனை ஆற்றுவதற்கு நீதியே அவசியம். அதுவே மருந்து. பத்தாண்டுகளாக உழலும் எம் இனத்தின் காயங்களில் சிறிதளவேனும் ஆற்றப்படவில்லை. மாறாக காயங்களை பெருப்பிக்கும் முயற்சிகள்தான் நடக்கின்றன.

ஈழ மண்ணிலே, வீட்டுக்கு ஒருவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். சில இடங்களில் வீட்டோடு முழு குடும்பமும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறது. ஈழ நிலத்திலே, வீட்டுக்கு ஒருவர் கொல்லப்பட்டுள்ளனர். சில இடங்களில் வீட்டோடு முழு குடும்பமும் கொன்று அழிக்கப்பட்டிருக்கிறது. கண்களை மூடிக்கொண்டால், முள்ளிவாய்க்கால்தான் எமை அலைக்களிக்கிறது. இரவுகளும் நினைவுகளும் முள்ளிவாய்க்கால் காயங்களையே கிளறுகின்றன. அதற்கான காரணம் எமக்கு நீதி வழங்கப்படவில்லை. அதற்கான பொறுப்பு கூறப்படவில்லை. இந்த நிலை எதுவரை தொடரப் போகிறது?

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஒரு விளக்கினை ஏற்றி அவர்களுக்கு ஒரு துளி கண்ணீர் விட்டு அழுவதற்கு நாம் இந்த பத்தாண்டுகளில் போராடி இருக்கின்றோம். முள்ளிவாய்க்காலில் நடந்தது இனப்படுகொலை என்பதை சொல்வதற்கு போராடியுள்ளோம். இதை சர்வதேச ரீதியிலான போராட்டமாக முன்னெடுப்பதற்குப் பதிலாக நமக்குள்ளான முரண்பாடுகளாகவும் சிக்கல்களாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்போதும், முள்ளிவாய்க்காலில் யார் பிரதான சுடரை ஏற்றுவது? யார் அஞ்சலி செலுத்துவதை என்பதற்கான சண்டைதான் நடக்கிறது. வெறுமனே எண்ணையில் திரியினை முக்கி, தீபம் ஒன்று ஏற்றுவதே உத்தமான செயல் என்றளவில் உள்ளது எம் நிலவரம்.

நமது தரப்புக்கள் இதற்குள் முரண்பட்டுக் கொண்டிருக்க, சர்வதேச ரீதியில் ஈழ இனப்படுகொலை குற்றத்திலிருந்து எப்படி தப்புவது என்ற தந்திரங்களில் ஈடுபட்டு வருகின்றது இலங்கை அரசு. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், சர்வதேச சமூகத்திற்கு உகந்த அரசாக செயற்படும் மைத்திரிபால சிறிசேன ரணில் கூட்டரசாங்கம், இன அழிப்பு குற்றத்திலிருந்து தப்பிக்கொள்ள, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை வென்றிருப்பது தொடர்ந்தும் இனப்படுகொலைக்கே வழிவகுக்கும். சர்வதேச அரங்கில் ஒரு பேச்சு, நாட்டில் ஒரு பேச்சு என்ற நிலையில்தான் உள்ளது மைத்திரி மற்றும் ரணிலின் போர் குறித்த பொறுப்புக்கூறல்.

தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை உண்டு. அவர்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம். அவர்களுக்கென்று ஒரு தேசம் அவசியமானது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் இந்த உலகத்திற்கு உணர்த்தியிருக்கிறது. தமிழ் மக்கள் தமக்கான மரபுவழித் தாயகத்தையும் அவர்களுக்கான ஆட்சியையும் அதனை பாதுகாக்க வேண்டிய தேவை இருப்பதையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் இந்த உலகுக்கு உணர்த்தி இருக்கிறது. இப்போதைய நகர்வுகள் அதனை பின்னுக்கு தள்ளி, ஐக்கிய இலங்கைக்குள் தமிழரை அழிக்க முனைகின்றது.



சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான ஈழத் தமிழர்களின் போராட்டம், தமிழர்கள் ஒரு அரசை உருவாக்க கூடிய, சிறந்த கட்டமைப்புகளை உருவாக்க கூடிய, நிலத்தையும் இனத்தையும் பாதுகாக்கக் கூடிய ஓர் அரசை நடைமுறையில் சாத்தியப்படுத்தியது. ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட ஓரினத்தின் விடுதலை அமைப்பு, எப்படி போராட்டம் இனி நகர வேண்டும்? இனி எமது ஆயுதம் எது என்று தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் சரியாக பயணிப்பதே முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு செய்யும் அஞ்சலியாகும்.

இப்போதும் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இப்போதும் பண்பாடு சிதைக்கப்படுகிறது. அறிவிக்கப்படாத யுத்தமும் கண்ணுக்கு தெரியாத இன அழிப்பும் நீள்கிறது. இந்தப் பத்தி எழுதி கொண்டிருக்கக்கூடிய சமயத்தில் கூட முல்லைத்தீவு கொக்கிளாயில் சிங்களக் குடியேற்றங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருகோணமலையின் குச்சவெளி பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர். முல்லைத்தீவிலும் புத்தர் சிலைகளை வைப்பதற்காக முன்னெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வவுனியாவில் சைவாலயங்களில் விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பிறகும் சிங்கள அரசும் சிங்கள மக்களும் தமது ஆக்கிரமிப்புகளை தமிழ் மக்களின் பண்பாட்டை அழிக்கும் நடவடிக்கைகளையும் தமிழர் உரிமைகளை பறிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. மாறாக இன்னமும் விஸ்தரித்துள்ளனர். இன்னமும் தீவிரப்படுத்தியுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் இலங்கை அரசுக்கு ஆதரவு அளிப்பது என்பது மேலே குறிப்பிடப்பட்ட இன, நில அழிப்புக்களை ஊக்கப்படுத்தும் முயற்சிகளாகத்தான் அமையும்.

ஐக்கிய நாடுகள் சபையினுடைய மனித உரிமை அவையில் இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்து கால அவகாசம் வழங்குகின்ற செயற்பாடுகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணை அனுசரணை வழங்குகிறது. இதற்கு தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக காணாமல் போனவர்கள் பற்றிய உண்மைகளை வெளியிட மறுக்கின்ற இந்த அரசாங்கத்திற்கு இதற்காக எமது தலைமைகள் ஆதரவினை ஏன் வழங்குகின்றனர் என்ற கேள்வியை காணாமல்போனோரின் உறவுகள் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி. இலங்கை அரசாங்கத்தினுடைய கட்டமைப்புகள் சிங்கள பேரினவாதத்தை வளர்த்தெடுக்கும் நோக்கிலேயே இருக்கிறது. இலங்கை அரசோ, இலங்கை அரசின் நீதிக்கட்டமைப்பிலோ தமிழர்கள் நீதியினை பெற முடியாது. அவ்வாறு பெறக்கூடியதாக இருந்திருந்தால், முள்ளிவாய்க்கால் என்ற ஒரு இனப்படுகொலை ஈழ மண்ணில் நிகழ்ந்திராது. எனவே, நீதியான சர்வதேச தலையீடே இங்கு அவசியமானது.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், நிகழ்ச்சிகள் மிகவும் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. கொல்லப்பட்டவர்களின் நினைவாக மண்ணில் நடுவதற்கு மரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி பந்தலிடப்பட்டு வழங்கப்பட்டது. ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஊடாக நீதியினை நிலைநாட்ட வேண்டும் என்றும் ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டும் என்றும் முள்ளிவாய்க்கால் பிரகடனம், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது.

ஈழத்தில் சிங்கள அரசு நிகழ்த்திய இன அழிப்பு போரே சிங்கள தேசத்தின் அரசியலுக்கானது. இன்றைக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தையும், கொல்லப்பட்டவர்களுக்காக நீதியையும்கூட ஆளும் அரசும் எதிர்தரப்பும் அரசியலாகவே கையாண்டு வருகின்ற நிலையில், அந்த அரசியலுக்குள் நீதிக்கான போராட்டம் ஒருபோதும் சாத்தியமற்றது. இனப்படுகொலைக்கான நீதியை வழங்கும் பொறுப்பு, முழு சிங்கள தேசத்திற்குமானது. போர்க்காலத்தில், கொல்லப்பட்ட இராணுவத்தை, இன்று காணாமல் போன இராணுவமாக காட்ட முயலும் சிங்கள தேச அரசிடம், எவ்வாறு நீதியைப் பெற முடியும். அப்படி நம்பினால், ஓர் இனத்தின் அரசியலாக இல்லாது, அது ஈழத் தமிழ் மக்களை ஏமாற்றும் கட்சி அரசியலாகவே சுருங்கும்.

# தேர்தல் காலத்தில் நிபந்தனை இல்லாமல் ஆதரித்துவிட்டு இப்போது முதலைக்கண்ணீர் வடிக்கிறார்கள் - சிவசக்தி ஆனந்தன் காட்டம்

2015 ஆம் ஆண்டு சனாதிபதியினை தெரிவுசெய்யும் போது தமிழ் சமூகமும் சரி முஸ்லீம் சமூகமும் சரி எதுவிதமான நிபந்தனைகள் இல்லாமல் வெறுமனவே தங்களின் சுகபோகங்களுக்காக தேர்தல் காலத்தில் சில முடிவுகளை எடுத்துவிட்டு இப்போது நடக்கக்கூடிய சம்பவங்களை கண்டு நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள் என்று வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

26.05.19 அன்று முல்லைத்தீவு முள்ளியவளைப்பகுதியில் நடைபெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் 2015 ஆம் ஆண்டு சனாதிபதியினை தெரிவுசெய்யும் போது தமிழ் சமூகமும் சரி, முஸ்லீம் சமூகமும் சரி எதுவிதமான நிபந்தனைகள் இல்லாமல் வெறுமனவே தங்களின் சுகபோகங்களுக்காக தேர்தல் காலத்தில் சில முடிவுகளை எடுக்கின்றார்கள். அதன் பின்னர் நடக்கக்கூடிய சம்பவங்களை கண்டு நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள்

தமிழ்தேசியக்கூட்டமைப்பில் இருக்கக்கூடிய சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சொல்கின்றார்கள் எங்களை சனாதிபதி ஏமாற்றி விட்டார் பிரதமர் ஏமாற்றிவிட்டார் என்று. அதேபோல் முஸ்லீம் தலைவர்கள் அமைச்சர்களாக இருக்கக்கூடியவர்கள் தங்களால் கொண்டுவரப்பட்ட இந்த அரசாங்கம் சனாதிபதி மற்றும் பிரதமர் தங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று. 2015 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தல் வரும்போது கூட்டமைப்பில் இருக்கக்கூடிய தலைவர்களுக்கு திரும்பத்திரும்ப ஒரு செய்தியினை சொன்னோம். நிபந்தனை இல்லாமல் இந்த சனாதிபதி தேர்தலில் வாக்களிக்கக்கூடாது நிபந்தனை என்பது போர் முடிவடைந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சனையினை எப்படி தீர்க்கப்போகின்றார் என்று. சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட போகின்றவர்களிடம் இருந்து எழுத்துமூலம் உறுதி மொழியினை வாங்காமல் நாங்கள் ஆதரவு வழங்கக்கூடாது என்பதை கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தருக்கு திரும்பத்திரும்ப சொன்னோம். ஆனால் அவர் அதை காதில் போட்டுக்கொள்ளவில்லை. இன்று நிலைமைகள் மாறியுள்ளது. இந்த நான்கு ஆண்டுகள் காலத்திலும் நல்லாட்சி அரசாங்கத்துடன் சகல சுகபோகங்களை அனுபவித்த தமிழ் தலைமைகளும் சரி, முஸ்லீம் தலைமைகளும் சரி இன்று நடுத்தெருவில் விடப்பட்ட நிலைமை இருக்கின்றது.

இன்று யாருக்குமே பாதுகாப்பு இல்லாத நிலை. எப்போதும் யாரும் கைது செய்யப்படலாம்

பொதுமக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படுபவர்கள் எங்கே எப்படி செயல்படுகின்றார்கள் என்பதை சிந்திக்காமல் வாக்களிப்பதன் ஊடாகத்தான் நாங்கள் மீண்டும் மீண்டும் ஒரு இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றோம். பொது மக்கள் விளிப்பாக இருக்கவேண்டிய தேவை உள்ளது எங்கள் அரசியல் தலைமைகள் என்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்பது பற்றி சிந்திக்காத வரைக்கும் தொடர்ச்சியாக நாங்கள் பின்நோக்கி செல்லவேண்டிய நிலைமை இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தெற்கை விட வடக்கில் அதிகரித்து செல்லும் சிறீலங்கா படையினரின் சோதனை நடவடிக்கைகள்




சிறீலங்கா பாராளு மன்றத்தில் அவசரகால தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து சிறீலங்கா படையினர் மக்கள் வாழ் இடங்களை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி சந்தேகத்தில் பலரை கைதுசெய்துள்ளார்கள்

இந்நிலையில் குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் அதிகளவான படையினர் வீதிகளில் இறக்கப்பட்டு மக்களை சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். குறிப்பாக தெற்கினை விட வடக்கிற்கு செல்லும் மக்களே அதிகளவில் சோதனைக்கு உள்ளாவதாகவும் இதனால் தாம் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் இருந்து வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு செல்வதாயின் பல படையினரின் சோதனைகளை தாண்டியே செல்லவேண்டும். அதேவேளை வவுனியாவில் இருந்து தெற்குப்பகுதிக்கு செல்வதாயின் படையினரின் கெடுபிடிகள் இல்லை என்றும் மக்கள் ஆதங்கத்துடன் கூறுவதோடு இந்த விடயத்தில் தமிழ் தலைமைகள் அக்கறை கொள்ளவில்லை என்றும் விசனமடைந்துள்ளனர்

# அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடு வேண்டாம். சிறீலங்கா சனாதிபதி சிறிசேன உத்தரவு

அமெரிக்காவுடன் எந்தவொரு பாதுகாப்பு அல்லது பாதுகாப்புடன் தொடர்புடைய உடன்பாடுகளிலும் கையெழுத்திடக் கூடாது என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனா உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சராக தான் பதவியில் இருக்கும் நிலையில், பாதுகாப்புடன் தொடர்புடைய எந்தவொரு உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கும், தனது அனுமதி தேவை என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிறீலங்கா சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, சீனாவில் இருந்து கொழும்பு திரும்பிய பின்னர், வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவிடம், இது குறித்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். வொசிங்டனில் தங்கியிருந்த திலக் மாரப்பன, அமெரிக்கா – சிறீலங்கா இடையிலான சர்ச்சைக்குரிய சோபா உடன்பாட்டின்





சில விதிமுறைகள் குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த போதே, சிறீலங்கா அதிபர் இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.சோபா உடன்பாடு தொடர்பாக, முன்னதாக கொழும்பில் அமெரிக்க தூதரக அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். அதனை பகிரங்கப்படுத்தாமல், துரிதமாக உடன்பாட்டில் கையெழுத்திட அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், சில திருத்தங்களுடன் உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

# 8000 பேருக்கு கருத்தடை செய்ததை ஒப்புக்கொண்டாராம் வைத்தியர் - திவயின தகவல்

சிங்களப் பெண்களுக்குச் சட்டவிரோதமாகக் கருத்தடை சத்திர சிகிச்சையை மேற்கொண்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள குருணாகல் வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹமட் சாஃபி, தான் 8000 பேருக்கு மகப்பேற்று சத்திர சிகிச்சை புரிந்தமையை ஒப்புக்கொண்டார் என 'திவயின' இன்று (25) செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் கருத்தடை சத்திர சிகிச்சையை சட்டவிரோதமாக மேற்கொண்டிருப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக, குருணாகல் பொதுவைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமையில் நேற்று விசாரணை இடம்பெற்றது. இதன்போது அவர் இந்தத் தகவலைக் கூறியுள்ளார்.


சட்டவிரோதக் கருத்தடை சத்திர சிகிச்சை, வைத்தியசாலையில் பிறக்கின்ற குழந்தைகளை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச் செயல்களின் ஊடாக அவர் பெருமளவில் பணம் ஈட்டியுள்ளார் எனப் காவல் துறையினருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது எனவும் 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், நேற்றிரவு கைதுசெய்யப்பட்ட குறித்த வைத்தியர், சந்தேகத்துக்கு இடமான முறையில் சொத்து சேகரித்தார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காகவே கைதானார் என்று காவல் துறை பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அவர் கருத்தடை சத்திர சிகிச்சையைப் புரிந்தாரா? என்பது தொடர்பில் காவல் துறையின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. ஏற்கனவே அவர் 4000 சிங்களப் பெண்களுக்குச் சட்டவிரோதமாகக் கருத்தடை சத்திர சிகிச்சையைப் புரிந்தார் என 'திவயின' செய்தி வெளியிட்டிருந்ததை அடுத்து, இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செய்தி வெளியாக்கப்பட்டதை அடுத்து தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும், தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறும் குறித்த வைத்தியர், வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கோரியிருந்தார். இந்த விடயம் நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அது தொடர்பில்



ஆராய்ந்து சபையில் அறிவிப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய கூறியிருந்த போதிலும், நேற்று அவ்வாறான தெளிவுபடுத்தல் எதனையும் சபையில் அவர் வழங்கவில்லை. எனினும், சட்டவிரோதக் கருத்தடை சத்திர சிகிச்சை இடம்பெற்றமை தொடர்பாகக் காவல் துறையினரோ, புலனாய்வுப் பிரிவோ எந்த விசாரணைகளையும் நடத்தவில்லை என்று நேற்றுமுன்தினம் கூறிய சபாநாயகர், நேற்றைய அமர்வில் வைத்து இது தொடர்பில் காவல் துறைமா அதிபர் ஆராய்ந்து வருகின்றார் எனக் குறிப்பிட்டார்.

# உயிர்த்த ஞாயிறுப் படுகொலைகள்
## மத நிறுவனங்களை நோக்கிச் சில கேள்விகள்

நிலாந்தன்

*எல்லாமே விதிப்படிதான் நடக்கும் எதையுமே நம்மால் மாற்ற இயலாது, என்று சொல்பவர்கள் வீதியை கடக்கும் போது இருபுறமும் பார்த்து விட்டுக் கடப்பதை நான் பார்த்திருக்கிறேன்*
*- ஸ்டீ·பன் ஹொக்கிங்.*

கோயில்களின் காலம் முடிந்து விட்டது என்று மு.தளையசிங்கம் கூறியிருக்கின்றார். ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய மிக முக்கிய ஆன்மீக இலக்கியச் சிந்தனையாளர் செயற்பாட்டாளர் அவர். ஒரு புது மதத்தை முழு மதத்தை அவர் கனவு கண்டார்.

ஈழப்போர்க்களத்தில் எல்லா மதக் கோயில்களும் தாக்கப்பட்டிருக்கின்றன. போரில் ஈடுபட்ட எல்லாத் தரப்புக்களும் மற்றைய தரப்பின் ஆலயங்களை அல்லது வழிபாட்டிடங்களைத் தாக்கியிருக்கின்றன. இதில் கடைசியாக நடந்த தாக்குதல்களே ஈஸ்டர் குண்டு வெடிப்புக்களாகும். ஈழப்போரில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து பத்து ஆண்டுகளின் பின் இத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஈழப்போர்க் காலத்தில் பெரும்பாலான எல்லாக் கோயில்களும் பாதுகாப்பை இழந்து காணப்பட்டன. கோயில்களில் தஞ்சமடைந்த மக்களின் மீது விமானங்கள் குண்டுகளைப் போட்டன. இதனால் கோயில்கள் சேதமடைந்தன. கோயில்களில் தஞ்சமடைந்த மக்களைப் படையினர் சுற்றிவளைத்துப் பிடித்துச் சென்றனர். அல்லது கோயில்களுக்குள் வைத்தே சுட்டுக்கொன்றனர். மசூதியில் வழிபட்டுக்கொண்டிருந்த மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் கொல்லப்பட்டார்கள். அனுராதபுரத்தில் போதி மரத்தை வணங்கிக் கொண்டிருந்த பக்தர்களும் கொல்லப்பட்டார்கள். தலதா மாளிகை தாக்கப்பட்டது. அதாவது போரில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஆலயங்களைத் தாக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்குத் தஞ்சம் புகுந்த பெரும்பாலான கோயில்களில் பாதுகாப்பு கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல தொடர்ச்சியான பேரிடப்பெயர்வுகளின் போது தமிழ் மக்கள் தமது இஷ்ட தேவதைகளையும் வழிபாட்டிடங்களையும் கைவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதிசயங்கள் அற்புதங்கள் நடக்குமென்று நம்பிக் காத்திருந்த மக்கள் மிக மிகக் குறைவு. அதிசயங்கள் அற்புதங்களின் காலம் எப்பொழுதோ முடிந்து விட்டது என்று எக்ஸோடஸ் நாவலில் வருவது ஈழத்து தமிழர்களுக்கும் பொருந்துமா? தமது இஷ்ட தேவதையை முழுக்க முழுக்க நம்பித் தமது வழிபாட்டிடங்களில் இறுதி வரை தங்கியிருந்த மக்கள் மிகமிகக் குறைவு. அது ஓர் மிக அரிதான தோற்றப்பாடு.

குறிப்பாக 1995இல் யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்த போது பெரும்பாலான பெருங் கோயில்கள் வழிபாடின்றியும் பூசைகளின்றியும் இருண்டு கிடந்தன. இடம்பெயர்வு நிகழ்ந்து நான்கு நாட்களின் பின் சில நண்பர்களோடு நான் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்தேன். நல்லூரில் யாரும் இருக்கவில்லை. கோயிற் பிரகாரம் இருண்டு காணப்பட்டது. என்னோடு வந்த ஒரு நண்பர் கூறினார். "இப்படிக் கோயில்களில் விளக்குகள் எரியாத ஒரு காலம் வருமென்று யோகர் சுவாமிகள் முன்னொருமுறை கூறியிருப்பதாக"

தமிழ் மக்கள் பேரிடப்பெயர்வுகளின் போது பெரும்பாலும் கோயில்களைக் கைவிட்டு இடம்பெயர்ந்தார்கள் அல்லது கோயிற் சுருவங்களையும் தங்களோடு சேர்ந்து இடம்பெயர்த்தார்கள். நாலாம் கட்ட ஈழப்போரின் போது மடுமாதா இப்படி தேவன்பிட்டி வரையிலும் இடம்பெயர்ந்தார். அவர் தொடக்கத்திலிருந்தே அகதி மூர்த்தம்தான். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு மடுமாதா மாந்தையிலிருந்து அகதியாக மடுவுக்கு வந்தார். மூன்றாங் கட்ட ஈழப்போரின் போது மடுமாதாவின் கோயிற் பிரகாரத்திலேயே



பீரங்கிக் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. தஞ்சம் புகுந்திருந்த பக்தர்கள் கொல்லப்பட்டார்கள்.

நாலாங்கட்ட ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் பெருங்கடலுக்கும் சிறு கடலேரிக்கும் இடையே இருந்த ஒரு சிறு துண்டிற்குள் தமிழ் மக்கள் சிக்குண்டிருந்த போது சிறுகடலுக்கு அப்பால் முள்ளிவாய்க்காலைப் பார்த்துக் கொண்டு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் கோபுரம் காணப்பட்டது. எனது நண்பர் ஒருவர் கூறுவார். அக்கோபுரமும் ஒரு யுத்த சாட்சி என்று. ஆனால் ஜெனீவாவில் யுத்த சாட்சியம் சொல்ல வற்றாப்பளைக் கோபுரம் வரவில்லை. அது மட்டுமல்ல எந்த ஒரு படைத்தரப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு வற்றாப்பளைக் கோவிலுக்குட் புகுந்து தஞ்சம் புகுந்திருந்த மக்களை வேட்டையாடியதோ அதே படைத்தரப்பின் பாதுகாப்போடு கடந்த திங்கட்கிழமை வற்றாப்பளை பெருவிழா நடந்திருக்கின்றது.

இப்படியாக ஈழப்போர்க் களத்தில் ஆலயத்தில் தஞ்சம் புகுந்த மக்கள் பாதுகாக்கப்படவில்லை. ஆலயங்களும் பாதுகாக்கப்படவில்லை. ஆனாலும் ஆயுத மோதல்கள் முடிவடைந்த பின் மீளக் குடியமர்ந்த மக்களோடு கோயில்களும் பூசைகளும் வழிபாடுகளும் மீளக் குடியமர்ந்தன. உடைந்த அல்லது சிதைந்த கோயில்கள் மீளக் கட்டியெழுப்பப்பட்டன. புதிதாகவும் கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவியுடன் நடந்தன. தீவுப்பகுதிகளில் ஒரு கோயில் முதலில் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் ரூபாய்கள் செலவில் திருத்தப்பட்டது. ஆனால் அடுத்தடுத்த ஆண்டு கோடிக்கணக்கான ரூபாய் நிதி கிடைத்ததையடுத்து முதலில் கட்டப்பட்ட மண்டபம் உடைக்கப்பட்டு புதிதாக வேறொன்று முன்னதைவிட பெரியதாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இத்தனைக்கும் தீவுப்பகுதிகளில் சில பாடசாலைகளில் மாணவர்கள் காலை உணவு அருந்தாமல் படிக்க வருவதாக அங்கு வேலை செய்யும் ஒரு மருத்துவர் கூறுகிறார்.

இவ்வாறு 2009ற்குப் பின் கோயில்கள் பெருமெடுப்பில் புனரமைக்கப்பட்டு பல வண்ணங்களிலும் ஜொலித்துக் கொண்டிருந்த ஒரு பின்னணிக்குள் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. அத்தாக்குதல்கள் குறிப்பாக கோயில்களைக் குறிவைத்து நடத்தப்பட்டுள்ளன. அது கோயில்களுக்கும் உல்லாச விடுதிகளுக்கும் எதிரான ஒரு யுத்தமாகக் காணப்படுகிறது. இதையடுத்து கோயில்களைப் பாதுகாப்பதற்காக அவற்றைச் சுற்றிப் படையினர் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். கொச்சிக்கடை அந்தோனியார் கோயிற் பகுதி கிட்டத்தட்ட ஒரு கடற்படை வளாகம்போல காணப்படுகின்றது. கடந்த வாரம் நல்லூர் கோயிலுக்கு ஆபத்து என்று வெளிவந்த தகவலையடுத்து கோயில் வெளிவீதி மூடப்பட்டது. மிகச் செறிவாக படையினர் அப்பகுதியில் நிறுத்தப்பட்டார்கள். ஒரு மொட்டைக் கடிதத்தை வைத்து சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுகின்றன. "கடவுளுக்கு இதுவரை நான் எழுதிய கடிதங்களுக்கு அவர் பதில் போட்டதில்லை ஆனால் ஒரு மொட்டைக் கடிதத்துக்கு கடவுள் பயப்படுவதாக அரசாங்கம் நம்புகிறது" என்று எனது நண்பர் ஒருவர் பகிடியாகச் சொன்னார்.

நல்லூரில் கொச்சிக்கடையில் மட்டுமல்ல பெரும்பாலான பெருங்கோயில்களின் அருகே படைப் பிரசன்னத்தைக் காண முடிகிறது. தேவாலயங்களில் ஞாயிறு பூசைக்கு வரும் பக்தர்களை வாசலில் வைத்து காவல் துறையினரும், படையினரும் சோதனை செய்கிறார்கள். வற்றாப்பளை பெருவிழா கடந்த திங்கட்கிழமை நடந்தது. அதற்கு வரும் பக்தர்கள் என்னென்ன கொண்டு வரலாம் என்னென்ன கொண்டு வரக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டார்கள். கடைகள் அனுமதிக்கப்படவில்லை. எல்லாப் பக்தர்களும் சோதிக்கப்பட்டார்கள். வழமையாக வரும் பக்தர்களில் மூன்றில் ஒரு பங்கினரே திருவிழாவிற்கு வந்திருந்தார்கள்.

இவ்வாறு தமது இஷ்ட தேவையை அல்லது புனிதரை வணங்கச் செல்லும் போது சோதிக்கப்படுவதையிட்டு பக்தர்கள் என்ன கருதுகிறார்கள்? தமது கடவுளுக்கும் புனிதர்களுக்கும் படைத் தரப்பும் பொலிசும் பாதுகாப்பு வழங்குவதையிட்டு மதகுருக்களும், பூசகர்களும் ஆன்மீக வாதிகளும் என்ன கருதுகின்றார்கள்? கடவுளுக்கே பாதுகாப்பில்லை எனவே படையினரை நிறுத்தி கடவுளையும் கும்பிட வரும் பக்தர்களையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்களா? தன்னையும் தன்னை நம்பி வரும் பக்தர்களையும் ஏன் கடவுளாலும் புனிதர்களாலும் பாதுகாக்க முடியவில்லை? உயிர்த்த ஞாயிறு அன்று தன்னை நம்பி வந்த பக்தர்களை ஏன் அந்தோனியார் எதிரிகளிடம் கையளித்தார்?

இதுவிடயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பெருமதங்கள் மட்டுமல்ல ஆவிக்குரிய சபைகளும் பதில் கூற வேண்டும். செபம், தியானம், உபவாசம், தவம் என்று ஆண்டவரோடு உயிர்த் தொடர்பை பேணுவதாக நம்பப்படும் ஊழியக்காரர்களால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களை ஏன் முன்னுணர முடியவில்லை? ஏன் தடுக்க முடியவில்லை? ஊழியக்காரர்களையும் ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கும் பொறுப்பை படைத்தரப்பிடம் ஏன் ஒப்படைத்தார்கள்? கடவுளை விடவும் படைத்தரப்பு சக்தி மிக்கதா? அப்படியானால் முப்படைகளின் தளபதியான அரசுத்தலைவர் கடவுளைவிட

தொடர்ச்சி →

சர்வ வல்லமை பொருந்தியவரா? எந்த ஒரு படைத்தரப்பு சென் ஜேம்ஸ் தேவாலயத்துக்கு குண்டு வீசியதோ நவாலி சென் பீற்றர் தேவாலயத்திற்கு குண்டு வீசியதோ மடுமாதாவின் பிரகாரத்தை யுத்த களமாக்கியதோ வற்றாப்பளை அம்மன் கோயிலில் தஞ்சம் புகுந்த மக்களை வேட்டையாடியதோ அதே படைத் தரப்பிடம் பாதுகாப்பு கேட்பது ஏன்? இக்கேள்விகளுக்கு எல்லா மதத் தலைவர்களும் பதில் கூற வேண்டும். கடவுளுக்குப் பாதுகாப்பில்லாத உடைந்த ஆலயங்களை அவசர அவசரமாகத் திருத்தி பூசி மினுக்குவதை விட இக்கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் கண்டுபிடிக்க வேண்டும். தளையசிங்கம் கூறியது போல ஆலயங்களின் காலம் முடிந்து விட்டதா? அல்லது எக்ஸ்ஸோடஸ் நாவலில் வருவது போல அதிசயங்கள் அற்புதங்களின் காலம் எப்பொழுதோ முடிந்து விட்டதா? அல்லது தமது பக்தி, விசுவாசம், வழிபாடு போன்றவற்றில் குறையுள்ளதா? என்று எல்லா மதப்பிரிவுகளும் சிந்திக்க வேண்டும். இடித்த கோயிலை மீளக் கட்டி பூசி மினுக்கி வழிபடும் பக்தர்கள் அக்கோயில் ஏன் இடிக்கப்பட்டது? யார் இடித்தது? அப்படி இடிக்கப்பட்ட போது கடவுள் எங்கே? அல்லது அங்கே கடவுள் இல்லையா? என்ற கேள்விகளை ஏன் எழுப்புவதில்லை? யாந்திரிகமாக, சடங்காக மதங்களையும் மதகுருக்களையும், ஊழியக்காரர்களையும், பின்பற்றும் மந்தைகளா பக்தர்கள்?

இவ்வாறு சிங்கள பௌத்த சிந்தனைகளைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றியதால் ரத்தம் சிந்திய ஒருநாடு அந்த ஆயுத மோதல்கள் முடிவடைந்து பத்து ஆண்டுகளின் பின் மற்றொரு மதத்தைத் தவறாக விளங்கி வைத்திருக்கும் சிறிய குருட்டு விசுவாசிக் கூட்டம் ஒன்றின் தற்கொலை அரசியலுக்கு இரையாகியுள்ளது.

இலங்கைத்தீவில் நான்கு பெருமதங்களும் உண்டு. ஒவ்வொரு நாளும் காலையில் தனது ஒலிபரப்புக்களையும் ஒளிபரப்புக்களையும் மதப்பிரசங்கங்கள் அல்லது மத அனுஷ்டானங்களுடன் தொடங்கும் ஒரு நாடு தனது மதத் தலங்களை படைத்தரப்பின் பாதுகாப்பில் ஒப்படைத்து விட்டதா? இவ்வாறு தனது மத நம்பிக்கைகள் தொடர்பாகக் கேள்வி எழுப்பாத ஒரு மக்கள் அரசியலில் மட்டும் எப்படிக் கேள்வி எழுப்புவார்கள்? யாழ்ப்பாணத்தில் உள்ள அரங்கச் செயற்பாட்டாளரான கலாநிதி சிதம்பரநாதன் அடிக்கடி கூறுவார் " கிரிட்டிக்கலாக விமர்சன பூர்வமாகச் சிந்திக்கும் மக்களின் தொகையை அதிகரிக்க அதிகரிக்க அரசியலில் மாற்றம் உண்டாகும்" என்று ஆனால் தனது மத நம்பிக்கைகள் வழிபாடு என்பவற்றைக் குறித்து "கிரிட்டிக்கலாக" சிந்திக்காத ஒரு சமூகம் சமூகப் பொருளாதார அரசியல் விவகாரங்களில் மட்டும் கிரிட்டிக்கலாக எப்படிச் சிந்திக்கும்?

# அரசியல் கைதிகளை ஒருபோதும் விடுவிக்க முடியாது சிறிசேன

நாட்டில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்க முடியாதென சிறீலங்கா சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஞானசார தேரரையும் தமிழ் அரசியல் கைதிகளையும் ஒப்பிட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காகக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சிறிலங்கா சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்ய முடியுமாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை ஏன் விடுதலை செய்யமுடியாது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். இது தொடர்பில் சிறீலங்கா சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஞானசார தேரர் பயங்கரவாதி அல்லர். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவரும் அல்லர். நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டே அவர் மீது முன்வைக்கப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. நான் எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரைப் பொதுமன்னிப்பில் விடுதலை செய்ததில் தவறேதும் இல்லை. ஆனால், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் தண்டனை அனுபவித்துவரும் அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள். அவர்களுக்குத் தற்போதைய நிலைமையில் பொது மன்னிப்பு வழங்குவது கடினம். ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பளித்து அவரை விடுவிக்குமாறு பௌத்த மத பீடங்கள், சிவில் அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்புக்களும் என்னிடம் கோரி வந்தன. அதற்கமைய அவருக்கு நான் பொதுமன்னிப்பு வழங்கினேன்.

ஞானசார தேரருடன் அரசியல் கைதிகளை ஒப்பிட வேண்டாம். இவர் செய்த குற்றம் வேறு. அவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றம் வேறு. இரண்டையும் ஒப்பிட வேண்டாம். தற்போது 200 இற்கு உட்பட்ட அரசியல் கைதிகள்தான் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ளனர். ஏனையோர் படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளில் குற்றவாளிகளும் உள்ளனர் சந்தேகநபர்களும் உள்ளனர். குற்றவாளிகள் தண்டனையை அனுபவிக்கின்றார்கள். சந்தேகநபர்கள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இவர்கள் அனைவரினதும் விடுதலை விவகாரம் தொடர்பில் நாம் உயர்மட்ட பேச்சுக்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றோம். அவர்களை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம்" என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## எமது உறவுகளின் விடுதலையில் ஏன் இரட்டை வேடம் போடுகின்றீர்கள்

2 ஆம் பக்க தொடர்ச்சி →

ரணில் அரசாங்கத்தினை ஆட்சியில் அமர்த்தியது முதல், ஒக்டோபர் 26இல் ஏற்பட்ட அரசியல் புரட்சியின் போது ஆட்சிக்கு முண்டுகொடுக்கும் தீர்மானம் உட்பட தற்போது அமைச்சர் றிஷாட்டுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையில் அரசுக்கு பாதுகாப்பு கவசமாக செயற்படுவதற்கு தீர்மானம் எடுத்தது வரையில் எந்தவொரு நிபந்தனையுமின்றியே கூட்டமைப்பினராக நீங்கள் செயற்பட்டுள்ளீர்கள். இந்த தருணங்களில் சிறைகளில் வாடும் எமது உறவுகளுக்கான விடுதலையையாவது முதன்மைப்படுத்தி ஒரு நிபந்தனையாவது விதித்திருந்தீர்கள் என்றால் நிச்சயமாக அது சாத்தியப்பட்டிருக்கும். ஆனால் அத்தகைய தருணங்களையெல்லாம் விட்டுவிட்டு தற்போது நீங்கள் எழுப்பும் குரல் அதிசயத்தினையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

சனாதிபதி தேர்தல், பாராளுமன்றத்தேர்தல், அடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல் என்பன தொடர்ச்சியாக இடம்பெறவிருக்கின்றன என்பதை நாமும் அறிந்திருக்கின்றோம். தாயக பிரசைகளாக இருக்கும் நாம் ஓநாய் ஓலங்களையொன்றும் அறியாதவர்கள் அல்லர். ஆகவே எமது உறவுகளை உங்கள் வாக்குவங்கி அரசியலுக்காக பயன்படுத்தும் இரட்டை வேடத்தினை தயவு செய்து களைந்து விடுங்கள் என்று கோருகின்றோம் என்றனர்.

## தமிழர்கள் மீதான இன அழிப்பு தொடர்கிறது!

2 ஆம் பக்க தொடர்ச்சி →

என்றும் முஸ்லிம் எனவும் போலியான பெயரில் அங்கு பணிபுரிந்தது வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி இவரை புலனாய்வு பிரிவினர் தொடர்ந்து அவதானித்து வந்த நிலையில், இவர் ஏறாவூருக்கு தனது தாயாரின் வீட்டுக்கு சென்று அங்குள்ள பள்ளிக்கு தொழ சென்ற வேளையில் இவர் முஸ்லிம் நபர் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

இதற்கிடையில் இவர் பற்றிய ஒரு தகவல் முகப்புத்தக நூலில் வெளிவந்தபோது தான் தமிழர்தான். முஸ்லிம் அல்ல என மறுத்துரைத்து தன் மீது பொறாமை உள்ளவர்களே இந்த முகநூலை வெளியிட்டுள்ளார்கள் என தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி தனியார் நிறுவனமொன்றில் ஆசிரியராக கடமையாற்றிய முஸ்லிம் பெண் ஒருவரை திருமணம் முடித்ததற்காகவே தான் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூதூர் காவல் துறையினர் ஆலய குருக்களையும் பரிபாலன சபையினரையும் நேற்று சனிக்கிழமை அழைத்து விசாரணைகளை செய்துள்ளனர்.

இதேவேளை கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் குருக்களாக பணியாற்றி வரும் குருக்களுக்கு உதவியாளராக குறித்த நபர் சேர்ந்து கடந்த 02 வருடங்களாக இந்த ஆலயத்தில் பணியாற்றி வந்துள்ளதோடு மேற்படி குருக்களிடமிருந்தே குறிக்கப்பட்ட பணத்தை சம்பளமாக பெற்று வந்துள்ளார் எனவும் ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். இவர் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரையை கலந்து விநியோகித்துள்ளாரா என்பது தொடர்பில் தீவிர விசாரணைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மூதூர் காவல் துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் சிவா, என்று அழைக்கப்படும் குறித்த நபரின் உண்மையான பெயர் புஹாரி முகமது லாபீர் கான் என்றும் இவர் ஏறாவூரை பிறப்பிடமாகக் கொண்டவரென்றும் ஏற்கனவே மூன்று திருமணங்கள் செய்துள்ளார் எனவும் தெரிய வருகிறது. மூத்த மனைவி ஓட்டமாவடி மீராவோடையைச் சேர்ந்த அபுல் ஹாசன் சுபாஹனி என்றும் இரண்டாவது மனைவி மட்டக்களப்பு கரடியனாற்றைச் சேர்ந்த நல்லம்பி சாந்தியென்ற தமிழ் பெண் என்றும் மூன்றாவதாக திருமணம் செய்தவர் கல்முனையைச் சேர்ந்த ஏ.ஜே.எப்.சப்னா என்றும் தெரிய வருகிறது. இவர் ஏலவே கற்பழிப்பு மற்றும் ஜீவனாம்சம் வழங்காமை ஆகிய குற்றச்செயல்கள் காரணமாக நீதிமன்ற வழக்குக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர் என்றும் இவரது கையடக்க தொலைபேசியை பரிசீலித்த போது ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய சில தகவல்கள் கண்டறியப்பட்டதாகவும் காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்க சனாதிபதி டிரம்ப் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு



அடுத்த மாதம் யப்பானில் நடக்க உள்ள 'ஜி 20' உச்சி மாநாட்டின்போது அமெரிக்க சனாதிபதி டிரம்பை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசுகிறார். நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி கூட்டணி, வரலாற்று சாதனை வெற்றி பெற்றுள்ளது. பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் பதவி ஏற்க உள்ளார்.

இதையொட்டி அவரை அமெரிக்க சனாதிபதி டிரம்ப் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் பாரதீய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பதற்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

இதை வெள்ளை மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது டிரம்ப் தெரிவித்தார். அப்போது அவர் கூறும்போது, " இந்திய பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். தேர்தல் வெற்றிக்காக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தேன். நமது நாட்டின் சார்பிலும் வாழ்த்தினேன். அவர் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார். அவர் எனது நண்பர். நாம் இந்தியாவுடன் மிகச்சிறப்பான உறவை கொண்டுள்ளோம்" என குறிப்பிட்டார்.

மேலும், ''இந்திய மக்களுக்கு மோடி மிகப்பெரிய மனிதர் மிகப்பெரிய தலைவர்'' என டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.இந்த நிலையில் யப்பானில் உள்ள ஒசாகா நகரத்தில் அடுத்த மாதம் 28, 29 ந் தேதிகளில் 'ஜி 20' உச்சி மாநாடு நடக்கிறது. இதில், அமெரிக்கா, இந்தியா, யப்பான் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். இந்த உச்சி மாநாட்டின்போது பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க சனாதிபதி டிரம்பும் சந்தித்து பேசுகின்றனர். இதை வொஷிங்டன் வெள்ளை மாளிகை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், "ஒசாகாவில் நடைபெற உள்ள ஜி 20 உச்சி மாநாட்டின்போது தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து பேச ஆவலுடன் உள்ளனர். அப்போது அமெரிக்கா, இந்தியா, யப்பான் முத்தரப்பு சந்திப்பும், பேச்சு வார்த்தையும் நடக்க உள்ளது" என கூறப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க சனாதிபதி டிரம்ப், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, யப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே ஆகிய மூவரும் ஒன்றாக சந்தித்து பேசுவர். அப்போது டிரம்பும், மோடியும் தனிப்பட்ட முறையில் சந்தித்து இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது பற்றி பேசுவார்கள் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

## இந்தியாவில் தாக்குதல் நடத்த ஐ.எஸ் பயங்கரவாதிகள் ஊடுருவலா?

இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்காக கேரளா- லட்சத்தீவை நோக்கி சிறீலங்காவிலிருந்து 15 ஐ.எஸ் பயங்கரவாதிகள் படகில் வருகை தருவதாக இந்திய உளவுத்துறைக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

ஆகையால், கேரளா கடல் பகுதி, பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் அப்பகுதி முழுவதும் சோதனை நடத்தி வருவதாக கூறப்படுகின்றது. இதுவரை சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களிடம் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கேரள கடல் எல்லை வழியாக லட்சதீவிலுள்ள மினிகாய் நோக்கி வெள்ளை நிற படகில் 15 ஐ.எஸ் பயங்கரவாதிகள் செல்ல திட்டமிட்டுள்ளனர் எனவும் ஆகவே, கடலோர பாதுகாப்பு படையினர் ரோந்து பணியை தீவிரப்படுத்துவதுடன் மீனவர்களும் இவ்விடயத்தில் முக்கிய தகவல் ஏதும் கிடைக்கப்பெற்றால் உடனடியாக கடலோர பாதுகாப்பு படைக்கு தகவல் வழங்க வேண்டுமெனவும் புலனாய்வு பிரிவினரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீலங்காவில் ஈஸ்டர் தினத்தன்று ஐ.எஸ் அமைப்பின் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 256 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையிலேயே இந்தியாவிலும் தாக்குதல் நடத்துவதற்கு ஐ.எஸ் அமைப்பு தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஹ்மானுக்கு நன்றி சொன்ன மோடி.



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்கு நன்றி சொல்லியுள்ளார். இரண்டாவது முறையாக இந்திய பிரதமராக பதவியேற்கவுள்ளார் மோடி. தேர்தலில் வெற்றிபெற்ற மோடிக்கு கீச்சில் வாழ்த்து தெரிவித்துள்ளார் ஏ.ஆர். ரஹ்மான் வியக்கத்தக்க வகையில் ஒன்றிணைந்த இந்தியா முன்னேற்றமடைவதைக் காண ஆவலாக உள்ளேன் என்று கூறியுள்ளார்.

இதற்குப் பதில் அளித்த மோடி நன்றி ரஹ்மான். வலுவான வளம் மிகுந்த முன்னேற்றமான இந்தியாவைக் கட்டமைக்க தீவிர முயற்சி எடுப்பேன் என்று கூறியுள்ளார்.

# அடுத்த மாதம் மேல்சபை தேர்தல் வைகோ, அன்புமணி எம்.பி. ஆகிறார்கள்





தமிழகத்தில் மக்கள் தொகை அளவு, பரப்பளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மேல் சபை உறுப்பினர்களுக்கான இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் 18 மேல்சபை இடங்கள் உள்ளன. ஒரு மேல்சபை இடத்தை பெறுவதற்கு 34 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவை பெற வேண்டும். ஒரு மேல்சபை எம்.பி.யின் பதவி காலம் 6 ஆண்டுகள். இவை சுழற்சி முறையில் காலியாகும்.

மேல்சபை உறுப்பினர்களில் 6 பேரது பதவி காலம் ஜூலை 24-ஆம் திகதி முடிகிறது. வி.மைத்ரேயன், கே.ஆர். அர்ஜூனன், டி.ரத்னவேல், ஆர்.லட்சுமணன் (அ.தி.மு.க.), கனிமொழி (தி.மு.க.), டி.ராஜா (இந்திய கம்யூனிஸ்டு), ஆகியோரது பதவி காலம் முடிகிறது. இதனால் புதிய 6 மேல்சபை எம்.பி.க்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் (ஜூன்) நடக்கிறது.

சமீபத்தில் நடந்த 22 சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. 9 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இதனால் அந்த கட்சி மேல்சபையில் ஒரு இடத்தை இழக்கிறது. தி.மு.க. 13 இடங்களை கைப்பற்றியதால் கூடுதலாக ஒரு மேல்சபை எம்.பி. பதவியை பெறுகிறது. 234 தொகுதிகள் கொண்ட சட்டசபையில் அ.தி.மு.க.வின் பலம் 123 ஆக உள்ளது. தி.மு.க. கூட்டணி எண்ணிக்கை 110ஆக இருக்கிறது. டி.டி.வி. தினகரன் ஒரு தொகுதியில் உள்ளார்.

இதன்மூலம் மேல்சபையில் அ.தி.மு.க, தி.மு.க.வுக்கு தலா 3 இடங்கள் கிடைக்கும். ஒரு உறுப்பினருக்கு 34 எம்.எல்.ஏ.க்கள் தேவை. இதன்மூலம் அ.தி.மு.க.வில் 3 மேல்சபை உறுப்பினர்களுக்கு 102 பேர் தேவை. 21 எம்.எல்.ஏ.க்கள் அந்த கட்சியில் உபரியாக இருப்பார்கள்.

பாராளுமன்ற தேர்தலின் போது பா.ம.க.வுக்கு ஒரு மேல்சபை தொகுதி வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டது. இதன்படி பா.ம.க. இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் மேல்சபை எம்.பி.யாகிறார். அவர் ஏற்கனவே 2004 முதல் 2010 வரை மேல்சபை எம்.பி.யாக இருந்தார். தி.மு.க.வில் 3 மேல்சபை உறுப்பினர்கள் தேர்வுக்கு பிறகு 8 எம்.எல்.ஏ.க்கள் உபரியாக இருப்பார்கள்.

பாராளுமன்ற தேர்தல் கூட்டணி ஒப்பந்தப்படி ம.தி.மு.க.வுக்கு ஒரு மேல்சபை தொகுதியை தி.மு.க. ஒதுக்கியது. அதன்படி அந்த கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ மேல்சபை எம்.பி.யாக தேர்வு செய்யப்படுகிறார். அ.தி.மு.க.வில் இருந்து மற்ற 2 மேல்சபை உறுப்பினராக யார்? தேர்வு செய்யப்படுவார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மேல்சபை எம்.பி.யாக உள்ள மைத்ரேயன் மீண்டும் அந்த பதவியை கேட்பதாக தெரிகிறது. இதேபோல கரூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த தம்பி துரையும் மேல்சபை எம்.பி. பதவியை கேட்பதாக தெரிகிறது. அ.தி.மு.க. இது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. தி.மு.க.வில் உள்ள எஞ்சிய 2 இடத்தில் ஒரு தொகுதியை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்காக காங்கிரஸ் கேட்பதாக தகவல் வெளியாகி உள்ளது. காங்கிரசுக்கு கொடுத்த போது மீதமுள்ள ஒரு எம்.பி. பதவியை தி.மு.க. யாருக்கு கொடுக்க போகிறது என்று தெரியவில்லை. தி.மு.க. தலைமை இது குறித்து விரைவில் முடிவை அறிவிக்கும்.

# நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் தாக்குதல் - 25 இராணுவத்தினர் பலி

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் சில ஆண்டுகளாக நைஜீரிய அரசினை எதிர்த்து போகோ ஹராம் தீவிரவாதிகள் வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்பின் தற்கொலை படையினர் நடத்திய தாக்குதல்களில் 20,000 பேர் உயிரிழந்துள்ளனர். 2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ராணுவ தளம் அருகில் போகோ ஹராம் பயங்கரவாத அமைப்பினர் அதிரடி தாக்குதல் நடத்தினர். 4 துப்பாக்கி டிரக்குகள், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன்



வந்து தாக்கினர். இந்த தாக்குதலில் 25 ராணுவ வீரர்கள் உள்பட பொதுமக்கள் பலரும் உயிரிழந்துள்ளதாக முதல் கட்ட தகவல் வெளியானது.

மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. போகோ ஹராம் அமைப்பு ஆபிரிக்காவின் வடக்கு மற்றும் மத்திய பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த அமைப்பு 2009ம் ஆண்டு நைஜீரியாவின் அரசினை எதிர்த்து உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 3 ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு ஈராக் நீதிமன்றம் மரண தண்டனை

சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி அப்பாவி பொதுமக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்த ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தினர் பலரை அமெரிக்காவின் உதவியுடன் சிரியா அரசு சுட்டுக் கொன்றது. பல பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். இப்படி கைது செய்யப்பட்டவர்களில் பலர் அண்டைநாடான ஈராக்கிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களில் கடந்த பெப்ரவரி மாதம் சிரியாவால் ஈராக்கிடம் ஒப்படைக்கப்பட்ட சிலரில் 12 பேர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்கள். இவர்களுக்கு எதிராக பாக்தாத் நகரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் கெவின் கோனோட், லியோனார்ட் லோபெஸ், சலிம் மச்சாவ் ஆகிய மூவருக்கு மரண தண்டனை விதித்து இன்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த தீர்ப்புக்கு எதிராக தண்டனை விதிக்கப்பட்டவர்கள் 30 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெரு நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்; ரிக்டரில் 8.0 ஆக பதிவு




பெரு நாட்டில் இன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 8.0 ஆக பதிவாகி உள்ளது. இந்நிலநடுக்கம் ஆனது லகுனாஸ் என்ற கிராமத்தின் தென்கிழக்கே 80 கி.மீட்டர் தொலைவிலும், யூரிமேகுவாஸ் என்ற பெரிய நகரத்தின் வடகிழக்கே 158 கி.மீட்டர் தொலைவிலும், 114 கி.மீட்டர் ஆழத்திலும் மையம் கொண்டுள்ளது.

இதனை அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. பெரு நாட்டு அரசாங்கத்தின் அவசரகால துறை வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், தலைநகர் லிமா மற்றும் கல்லாவோ நகரில் நிலநடுக்கம் உணரப்பட்டு உள்ளது. இது 7.2 ஆக பதிவாகி உள்ளது என தெரிவித்து உள்ளது. இதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் உள்ளிட்ட பிற விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

## இரகசிய ஆயுதங்களை கொண்டு 'அமெரிக்க போர்க்கப்பல்களை மூழ்கடிப்போம்' ஈரான் மிரட்டல்

மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க போர்க்கப்பல்களை ரகசிய ஆயுதங்களை கொண்டு மூழ்கடித்து விடுவோம் என ஈரான் மிரட்டல் விடுத்துள்ளது.

ஈரானின் அணு ஆயுத செயல்பாடுகளை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், அந்நாட்டுடன் அமெரிக்கா, ரஷியா உள்ளிட்ட 6 நாடுகள் வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் ஒன்றை கடந்த 2015ம் ஆண்டு ஏற்படுத்தின. ஒபாமா காலத்தில் செய்யப்பட்ட இந்த அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்க நலன் கருத்தில் கொள்ளப்படவில்லை என தற்போதைய சனாதிபதி டிரம்ப் கூறி வந்தார்.

இதன் காரணமாக இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்வதாக கடந்த ஆண்டு மே மாதம் டிரம்ப் அதிரடியாக அறிவித்தார். இதன் மூலம் ஈரான் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதிக்க வழி கிடைத்தது. அதன் படி ஈரான் மீது அதிகமான பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்தது. இது ஈரானின் பொருளாதாரத்தை பின்னுக்கு தள்ளியது. இதனால் அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான உறவு முற்றிலும் சீர்குலைந்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையில் கடும் மோதல் போக்கு நீடிக்கிறது. இந்த பதற்றமான சூழலில் ஈரானை அச்சுறுத்தும் வகையில் அமெரிக்கா தனது போர்க்கப்பல்களையும், போர் விமானங்களையும், தளபாடங்களையும் மத்திய கிழக்கு பகுதிக்கு அனுப்பியது. ஈரான் மூலம் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க வீரர்களுக்கு ஆபத்து நேரலாம் என்ற எதிர்பார்ப்பில்தான் போர்க்கப்பல்கள், போர் விமானங்கள், தளவாடங்களை அனுப்பியதாக அமெரிக்கா நியாயப்படுத்தியது.

ஆனால் ஈரான் இதனை மறுத்ததோடு



அமெரிக்காவின் செயல் முட்டாள்தனமானது எனவும் கூறியது. ஈரான் மீது அமெரிக்கா கொடுக்கும் தொடர் அழுத்தங்கள் போருக்கு வழிவகுக்கும் என ஈரான் அதிபர் ஹசன் ருஹானி தெரிவித்தார். அதே சமயம் ஈரான், அமெரிக்காவுடன் போருக்கு வந்தால் அந்த நாடு அழிந்துவிடும் என டிரம்ப் மிரட்டல் விடுத்தார். அத்துடன் மத்திய கிழக்கு பகுதிக்கு கூடுதலாக 1,500 ராணுவ வீரர்களை அனுப்ப முடிவு செய்துள்ளதாக அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் நேற்று முன்தினம் அறிவித்தது. இது மேலும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க போர்க்கப்பல்களை இரகசிய ஆயுதங்கள் மூலம் கடலுக்கு அடியில் மூழ்கடித்து விடுவோம் என ஈரான் ராணுவ ஆலோசகர் மோர்டாசா குர்பானி மிரட்டி உள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், ''இந்த பிராந்தியத்துக்கு அமெரிக்கா போர் கப்பல்களை அனுப்பி இருக்கிறது. அவர்கள் சிறிதளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டாலும் அவர்களின் போர்க்கப்பல்களை, வீரர்களோடு கடலுக்கு அடியில் மூழ்கடித்து விடுவோம். எங்களது 2 ஏவுகணைகள் அல்லது இரகசிய ஆயுதங்கள் இதனை கச்சிதமாக செய்துமுடிக்கும்'' என குறிப்பிட்டார்.

## வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனைகளால் எனக்கு எந்த இடையூறும் இல்லை - அமெரிக்க அதிபர் டிரம்ப்

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் 4 நாட்கள் சுற்றுப்பயணம் ஆக யப்பான் நாட்டிற்கு சென்றுள்ளார். அங்கு அந்நாட்டு பிரதமர் ஷின்ஜோ அபேவை சந்தித்து பேசுகிறார். இந்த நிலையில், டிரம்ப் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், சிறிய ரக ஆயுதங்களை வடகொரியா



பரிசோதனை செய்துள்ளது. இதனால் என்னுடைய நிர்வாகத்தில் உள்ள சிலர் மற்றும் வேறு சிலருக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

ஆனால் எனக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. கிம் எனக்கு அளித்த வாக்குறுதியை காத்திடுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என தெரிவித்து உள்ளார். வடகொரியாவின் சமீபத்திய குறைந்த தொலைவு சென்று தாக்கும் ஏவுகணை பரிசோதனையானது ஐ.நா. தீர்மானங்களை மீறிய செயல் என யப்பான் அரசு கூறியிருந்தது. இதனை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டனும் ஆமோதிக்கும் வகையில் பேசினார். அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் யப்பான் பிரதமர் அபே ஆகிய இரு தலைவர்கள் இடையேயான இன்று நடைபெறும் சந்திப்பில், வடகொரிய விவகாரம், வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் ஈரான் விவகாரம் ஆகியவை பற்றி விவாதிக்கப்படும்.


# கற்றாழை மிகச்சிறந்த மூலிகைப் பொருள்



காடுகளில் நீர்நிலைகளின் அருகில் அடர்ந்து செழித்து வளர்ந்து கிடப்பதைப் பார்க்கலாம். வறண்ட வனாந்தரத்திலும் பசுமையுடன் வளர்ந்திருக்கும். சிறிய முட்களுடன், வாள் போல பட்டையாக காணப்படும் இதில் உங்களைப்போன்ற சிறுவர்கள் பெயர் எழுதி விளையாடுவது உண்டு.

அதன் குருத்து குலையை அப்படியே பிடுங்கி அம்புபோல வீசி விளையாடுவதும் உண்டு. உண்மையில் கற்றாழை விளையாட்டுப் பொருளல்ல. மிகச்சிறந்த மூலிகைப் பொருள். 75 வகையான அத்தியாவசிப் பொருட்கள் கற்றாழையில் மிகுந்திருக்கிறது. கற்றாழையின் அருமை, பெருமைகளை அறிவோமா...

கற்றாழையின் இரண்டு பாகங்களான சதை (ஜெல்) மற்றும் பாலில் இருந்து பல்வேறு பொருட்கள் தயாராகிறது. கற்றாழைப் பால் மஞ்சள் நிறத்தில் இருக்கும். கற்றாழையின் அடிப்புறத்தை உற்றுக் கவனித்தால் இதை அறியலாம். கற்றாழை தோலை நீக்கிவிட்டுப் பார்த்தால் கெட்டியான கூழ்போன்ற சதைப்பகுதி தெளிவாகத் தெரியும்.



கற்றாழையில் 240 வகைகள் உள்ளன. 4 கண்டங்களில் இவை காணப்படுகின்றன. ஆனால் இப்போது மக்கள் 4 வகை கற்றாழைகளையே அதிகமாக பயிரிடுகிறார்கள். ஆரோக்கியம் வழங்கும் மருந்து மற்றும் உணவுப்பொருளாக இவை பயன்படுகின்றன. 'அலோ வேரா பார்படென்சிஸ்' இனம்தான் அதிகமாக பயிரிடப்படும் கற்றாழை இனமாகும். இது வட ஆப்பிரிக்காவை பூர்வீகமாக கொண்டது. கற்றாழையின் ஜெல்லில் 96 சதவீதம் நீர் நிரம்பி இருக்கிறது. இதுவே வறண்ட சூழலில் அவை தாக்குப்பிடித்து வாழ காரணமாகவும் அமைகிறது. கற்றாழை சதைப்பகுதியில் பல்வேறு வகை விற்றமின்கள், அமினோ அமிலங்கள், தாதுப்பொருட்கள் உள்ளிட்ட 75 வகை பொருட்கள் அடங்கி உள்ளன. இவ்வளவு சத்துப்பொருட்கள் நிரம்பியிருப்பதுதான் அவற்றை மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த பொருளாக மாற்றியிருக்கிறது. கற்றாழையின் சதைப்பகுதி நீரிழிவு, ஆஸ்துமா, வலிப்பு, வாதம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிறந்த நிவாரணம் தரும். பல்வேறு சரும பிரச்சினைகளுக்கும் இது தீர்வு தருகிறது.

கற்றாழைப் பொருட்கள் உடல்சூடு தணிக்கும். மலச்சிக்கலை தீர்க்கும். உடலின் நச்சுக் கழிவுகளை அகற்றும்.

கற்றாழைச்சாறு செய்தும், மற்ற உணவுப்பொருட்கள் மற்றும் சுவையூட்டும் பொருட்களுடன் சேர்த்தும் சாப்பிடப்படுகிறது. அப்படியே தனித்துச் சாப்பிடுவதும் உண்டு. கசக்கும், பிடிக்காது என்று காரணம் காட்டி கற்றாழையை தவிர்ப்பது ஆரோக்கியமற்ற பழக்க வழக்கமாகும். மருத்துவ உலகில் பல்வேறு மருந்துகளிலும், சத்து பானங்களிலும் கற்றாழை சேர்க்கப்படுகிறது. பற்பசை, சருமப் பொருட்கள், வாசனைப் பொருட்கள் தயாரிப்பிலும் சேர்க்கப்படுகிறது. எகிப்தியர்கள் கற்றாழையை புனிதமான தாவரமாக கருதினர். அவர்கள் மனிதர்களின் இறுதிச்சடங்கிலும் இதை பயன்படுத்தி உள்ளனர். வரலாற்றில் பேரழகியாக வர்ணிக்கப்படும் கிளியோபட்ரா தனது சரும அழகுப் பொருளாக கற்றாழையை பயன்படுத்தியதாக கூறப்படுகிறது.

கற்றாழை, கடுமையான வரண்ட சூழலிலும் 100 ஆண்டுகளைத் தாண்டி வாழக்கூடியது. எனவே இதை பயன்படுத்துபவர்களும் ஆரோக்கியமாக நீண்ட ஆயுள் பெறுவார்கள் என்ற நம்பிக்கை நிலவுகிறது. அமெரிக்கர்கள், கற்றாழையை 'சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் மந்திரத் தாவரம்' என்று போற்றுகிறார்கள். பலவிதங்களில் அவர்கள் கற்றாழையை பயன்படுத்துகிறார்கள். தொட்டிச்செடியாக இந்த மருத்துவ தாவரத்தை வீடுகளிலேயே வளர்க்கலாம்.

## 30 ஆயிரம் ஆண்டுகள் 'உயிருடன்' இருக்கும் விதைகள்



அழிந்து போய்விட்ட தாவர இனத்தை ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் மீண்டும் உருவாக்கியுள்ளனர். அணில்கள் 32 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதைத்து வைத்த விதைகளைக் கொண்டு இந்த தாவர இனத்தை அவர்கள் உருவாக்கினர்.

குளிரான பருவநிலையில் வளரும் சைலீன் ஸ்டெனோபைலா என்ற தாவரம் பனி யுகத்தில் இருந்ததாகக் கருதப்படுகிறது. சைபீரியாவில் உறைந்துபோன நதிக் கரையில் புதைந்து போயிருந்த விதைகளைக் கொண்டு இந்தத் தாவர இனத்தை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கினர்.


அந்த விதைகளில் இருந்து திசுக்களை எடுத்து புதிய தாவரங்களை வளரச் செய்தனர். பிறகு அவை தாமாகவே பெருகிவிட்டன. பனிப் பிரதேசங்களில் மிஞ்சியுள்ள பொருட்களில் இருந்து அழிந்து போய்விட்ட தாவர இனங்களை உருவாக்குவதில் இது முதலாவது முயற்சியாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

## பழங்கால பயிர்கள் செவ்வாய் கிரகத்தில் வாழ முடியும்

இவை செவ்வாயிலும் உயிர்வாழுமா? செவ்வாய் கிரகத்தில் உயிர் வாழ்வதற்கு ஏற்ற கடினமான இரண்டு தாவர வகைகளை ஜெர்மனி விஞ்ஞானிகள் அடையாளம் கண்டனர்.

சுவிஸ்லாந்து மற்றும் அந்தாட்டிக்காவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட கற்பாசிகள் (Lichens) மற்றும் நீலப்பசும் பக்ரீறியா (Cyanobacteria) என்ற இரண்டு உயிரிகளாக இருப்பதால் இதில் ஆச்சரியம் ஏதும்இல்லை.

இந்த ஆதிகால தாவரங்கள் அதில் உயிர்வாழ முடியுமா என பரிசோதனை செய்வதற்காக - கடுமையான சூரிய வெப்பம், வெப்ப நிலையில் ஏற்ற இறக்கங்கள், அதிக அளவிலான உலர்ந்த நிலை மற்றும் குறைவான காற்றழுத்தம் - போன்ற செவ்வாய் கிரகத்தின் சூழ்நிலைகளை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கினர்.



என்ன முடிவு கிடைத்தது? இந்தத் தாவர இனங்கள் உயிர் பிழைத்திருந்தது மட்டுமின்றி, ஒளிச் சேர்க்கை செய்தல் மற்றும் வழக்கமான தாவர செயல்பாடுகள் தொடர்ந்து நடக்கின்றன என்பதைக் கண்டறிந்தார்கள்.

## செவ்வாய் கிரகத்தில் வாழும் திறனுள்ள பூமியின் ஆதிகால உயிரிகள்



சில தாவரங்கள் மிக கடுமையான சூழலிலும் வாழக் கூடியவை. ஒட்சிசனே இல்லாத நிலையிலோ அல்லது மிகவும் அதிக வெப்ப நிலையிலோ உயிர்வாழக் கூடியவையாக அவை உள்ளன. தாவரங்களின் தாக்குபிடிக்கும் தன்மையானது, பருவநிலை மாற்ற சூழ்நிலை நமது உணவு உற்பத்தியை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பது பற்றியும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயிர்கள் எப்படி தகவமைப்பு செய்து கொள்ளும் என்பது பற்றிய ஆராய்ச்சியில் விஞ்ஞானிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் ஒன்றைவிட மற்றொரு தாவரம் அதிக தாக்குபிடிக்கும் தன்மை கொண்டது என எப்படி அமைகிறது? இதற்கான பதிலை கண்டறிவதற்கு தாவரவியலாளரும் பிபிசி நிகழ்ச்சித் தொகுப்பாளருமான ஜேம்ஸ் வோங் முயற்சி மேற்கொண்டார். அப்போது நமது பூமியின் கடினமான தாவரங்களின் வினோதமான மற்றும் ஆச்சரியத்துக்குரிய உண்மைகளை அவர் கண்டறிந்தார்.